2017 ஏப்ரல் 06
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரஜப் பிறை 08 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 056

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
நவமணி
களின் சுதந்திரமான குரல்



இலங்கைக்கான
சீனா – இந்திய யுத்தம்
04»



12»
டி 20 அரங்கில் மாலிங்க புதிய சாதனை



நுரைச்சோலை வீடமைப்பு திட்டம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுமா?
07»

ஜனாதிபதியின் வில்பத்து பிரகடனம்

# முஸ்லிம் சட்டத்தரணிகள் வழக்கு தாக்கல்

வில்பத்துவுக்கு வடக்கே முசலிப் பிரதேச மக்களின் பூர்வீகக் காணிகளை உள்ளடக்கி அண்மையில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலினை ஆட்சேபித்து வழக்குத் தொடர்வதற்கு முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம் அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் கூடிய போது, இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக சிரேஷ்ட சட்டத்தரணியான என்.எம். சஹீத் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் வில்பத்து வடக்கே நான்கு பிரதேசங்களை

11 »»»»

## மாலபே உடற்பாகங்கள் வசீமுடையது அல்ல

இரகசியப் பொலிஸார் அறிவிப்பு

■ பீ.எப்.எம் றிஷாட்

மாலபே தனியார் வைத்தியக் கல்லூரியில் இருந்து இரகசிய பொலிஸாரால் மீட்கப்பட்ட உடற்பாகங்களில் றக்பி

11 »»»»



## மின்சார சபை ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தம்

■ பா.மலரம்பிகை

சம்பள உயர்வு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (05) நள்ளிரவு 12 மணியிலிருந்து இன்று(06) நள்ளிரவு 12 மணிவரை வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை மின்சார சபை ஊழியர்கள்

11 »»»»

முஸ்லிம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள

# படைமுகாம்களை அகற்ற பாதுகாப்பு அமைச்சு இணக்கம்



■ பிறவ்ஸ்

முஸ்லிம் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய பாதுகாப்பு முகாம்களை அகற்றுவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை (05) பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

11 »»»»

## வில்பத்து உட்பட சகல வனங்களையும் வனவிலங்கு சட்டத்துள் உள்வாங்கவும்

தேசிய ஒருங்கிணைப்பு குழு வேண்டுகோள்

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வனப்பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட சகல வனப் பிரதேசங்களையும் உள்ளடக்கி வில்பத்து சரணாலயத்துடன் இணைத்து

11 »»»»

## மாகாண, உள்ளூராட்சி தேர்தல்களை பழைய முறையில் நடத்தவும்



பிரதமர் வேண்டுகோள்

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் ஒரே முறையில் நடத்தப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்று கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கள, தமிழ்

11 »»»»

## விடுமுறையில் சுற்றுலா செல்வோர் இஸ்லாமிய வரையறை பேணவும்


உலமா சபை வேண்டுகோள்

■ ஆதில் அலி சப்ரி

விடுமுறை காலத்தில் சுற்றுலா செல்வோர் இஸ்லாமிய வரையறைகளையும் ஒழுக்க விழுமியங்களையும் பேணி, பிற

11 »»»»

## நீதிமன்றில் பௌசி ஆஜர்; நிரபராதி என தெரிவிப்பு



அமைச்சர் ஏ.எச்.எம். பௌசிக்கு எதிராக சட்ட விரோதமாக வாகனம் ஒன்றைப் பயன்படுத்தியதாகக் கூறி இலஞ்ச ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்பு பிரதம நீதவான் லால் பண்டார முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அமைச்சர் பௌசி ஆஜராகினார்.

அமைச்சர் பௌசிக்கு குற்றப்பத்திரம்

11 »»»»

## பேராதனை பல்கலையில் வைரஸ் காய்ச்சல் தீவிரம்:

பரீட்சைகளும் ஒத்திவைப்பு



■ ஆதில் அலி சப்ரி

பேராதெனிய பல்கலைக் கழகத்தின் வெளிவாரி தொடர்நிலைக் கல்வி மையம்

11 »»»»

## நாவலப்பிட்டி பஸ் விபத்து: 53 பேர் படுகாயம்



■ க.கிஷாந்தன்

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலப்பிட்டி - குருந்துவத்தை பிரதான வீதியில் நாவலப்பிட்டி பகுதியிலிருந்து குருந்துவத்தை பகுதியை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று செம்ரோக் எனும் பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று மதியம் 12.30 மணியளவில் இவ்விபத்து

11 »»»»

## பிற்போடப்பட்டன ஐ.தே.க. பதவி மாற்றங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகத்தர் பதவி மாற்றங்கள் மேற்கொள்வது ஒத்தி போடப்பட்டுள்ளதாக

11 »»»»



## இலங்கைக்கு பயணிக்க வேண்டாம் பிரஜைகளுக்கு கட்டார் வேண்டுகோள்

கட்டார் நாட்டில் இருந்து எவரும் இலங்கைக்கு சுற்றுலா செல்ல வேண்டாம் என, கட்டார் நாட்டின் வெளிவிவகார அமைச்சு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

எச்1என்1 வைரஸ் தொற்று இலங்கையினுள் பரவியுள்ளதனை இலங்கை அதிகாரிகள்

11 »»»»

# கட்சி, ஜமாஅத், தரீக்கா வேறுபாடுகளை மறந்து முஸ்லிம் சமூகம் ஒன்றுபட வேண்டும்

## இன்றேல் சமூகத்தின் எதிர்காலம் சூனியமாகும்

## பேராசிரியர் ஹுஸைன் இஸ்மாயில்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால விமோசனம் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. எதிர்காலச் சவால்களை முறியடிக்கவும் உரிமைகளை வென்றெடுக்கவும் இந்நாட்டில் சக்திமிக்க சமூகமாக வாழ்வதற்கும் இயக்க, கட்சி, ஜமாஅத், தரீக்கா மற்றும் பிரதேச ரீதியிலான சகல வேற்றுமைகளையும் மறந்து கருத்தொருமைப்பாட்டுடன் முஸ்லிம் சமூகம் ஒன்றிணைய வேண்டிய தருணம் வந்துள்ளதாக கூறிய பேராசிரியர் ஏ.ஜீ.ஹுஸைன் இஸ்மாயில் முஸ்லிம் சமூகம் ஒன்றுபடத் தவறுமேயானால் எதிர்காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் பேருவளை மருதானை அப்ரார் பவுண்டேசன் ஏற்பாட்டிலான முப்பெரும் விழாவில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு கூறினார்.

பேருவளை மருதானை அல் - பாஸியத்துல் நஸ்ரியா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு தேசிய ஊடக மத்திய நிலைய தலைவர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தலைமை வகித்தார்.

பவுண்டேசன் தலைவர் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ஏ.டப்ளியூ. எம்.அஜ்வாத் வரவேற்புரை நிகழ்த்தினார். ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் தூதுவர் அப்துல் ஹாமில் ஏ.கே.முல்லா, பலஸ்தீன நாட்டின் தூதுவர் சுஹைர் முஹம்மத் ஹம்தல்லா செயித் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர். மொரொக்கோ நாட்டுக்கான கௌரவ கவுன்சிலராக நியமிக்கப்பட்டுள்ள அஹ்சன் ரிபாய், பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் ஏ.ஜீ.ஹுஸைன் இஸ்மாயில் ஆகியோர் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 17 மாணவர்களுக்கு தமது கல்வியை இடையூறின்றி தொடர புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. மருதானை முஹம்மத் அல் பாஸி அரபுக் கல்லூரியில் கற்ற ஏழு மாணவர்களுக்கு விழாவில் மௌலவி பட்ட சான்றிதழும் கையளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கலாநிதி ஹுஸைன் இஸ்மாயில் மேலும் கூறியதாவது,

பேருவளை நகரம் பாரம்பரிய வரலாற்றைக் கொண்டதாகும். இந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பூமியில் பிறந்த முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் இந்நாட்டு முஸ்லிம்களின் ஒரு அரும்பெரும் சொத்தாகும். இலட்சிய புருஷரான அவர் என்றும் கொள்கை மாறாதவர். அதன்மூலம் அவரின் நற்பெயர் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் கடந்த 15 வருட கால எல்லையில் பலர் கட்சி மாறி பதவிகளைப் பெற்றார்கள். இம்தியாஸ் பாக்கிர் மாக்காருக்கு கூட அந்த சந்தர்ப்பம் கிட்டியது. என்றாலும் அதை அவர் விரும்பவில்லை. அவர் சார்ந்த கட்சியிலேயே இருந்தார். பதவிக்காக கொள்கையை விட்டு அவர் மாறவில்லை. இது சிறந்த பண்பாகும்.

இம்தியாஸ் அமைச்சர் என்ற முறையில் சாதிக்கக்கூடிய விடயங்களை அமைச்சர் பதவி வகிக்காமல் சாதித்திருக்கிறார். இப்படி சாதிக்க அவருக்குள்ள நன்மதிப்பே காரணமாகும். நான் கூட இந்நிலைக்கு வருவதற்கு அவரும் ஒரு காரணமாவார்.

மர்ஹூம் எம்.ஏ.பாக்கிர் மாக்கார் இந்நாட்டில் ஒரு புதிய நல்லெண்ணத்தை எல்லா மக்கள் மத்தியிலும் வைத்து விட்டுச் சென்றுள்ளார். பேருவளை மக்கள் எந்தளவுக்கு இதைப் பற்றி புரிந்துள்ளார்கள் என்பது பற்றித் தெரியவில்லை.

நான் கடந்த ஆறு மாதகாலமாக 13 மாவட்டங்களுக்குச் சென்றுள்ளேன். 60 முஸ்லிம் கிராமங்கள் இம் மாவட்டங்களில் அடங்குகின்றன. இந்த முஸ்லிம் கிராமங்களில் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரையே கேட்கின்றனர். அவரின் அரசியல் பணியை மக்கள் விசேடமாக முஸ்லிம் அல்லாதவர்களும் கேட்கின்றனர். அவருக்கும் அவரது தகப்பனுக்கும் இருக்கும் மதிப்பையும் மரியாதையையும் அறிந்துகொண்டேன்.

இம்தியாஸின் புதல்வரின் ஜனாஸா நல்லடக்கத்தில் பொதுபலசேனாவின் செயலாளர் கலந்து கொண்டுள்ளார் என்ற செய்தியை றிஸ்வி முப்தி மூலம் அறிந்து கொண்டேன். அவர் மையவாடியில் வைத்து றிஸ்வி முப்தியுடன் கலந்துரையாடியுள்ளார். அப்போது அவர் இந்நாட்டு அரசியல்வாதிகளில் ஒழுங்கான மனிதரும் ஒரு நேர்மையான மனிதரும் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்தான். ஒழுங்காக பிள்ளை வளர்த்திருப்பதும் அவர்தான். அதனால் தான் இங்கு வந்தேன் என்று கூறியுள்ளார்.

இப்படியான பண்பான அரசியல்வாதிகளை நாடும் உலகமும் மதிக்கிறது. இம்தியாஸின் ஆளுமை, அறிவு, திறமை, பண்பு அவரை உயர் நிலைக்கு கொண்டுவந்துள்ளது. அவரை யு.என்.பி பாக்கிர் மாக்காரின் புதல்வர் என நினைத்து விடாதீர்கள். அவர் முழு முஸ்லிம் சமூகத்திற்குமான ஒரு சொத்தாகும். சமூகம் அவரின் சேவைகளை தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள வேண்டும்.



முஸ்லிம் சமூகம் எல்லா வேற்றுமைகளையும் மறந்து ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமே எதிர்காலம் சிறப்பாக அமையும். அரசியல், இயக்க, தரீக்கா, ஜமாஅத் என்று பிளவுபட்டு சண்டை பிடிக்காது சமூகத்தின் விமோசனம் கருதி ஒன்றுபட வேண்டும் என்றார்.

விழாவில் பேருவளை முன்னாள் நகர பிதா மஸாஹிம் முஹம்மத், ஜமாஅத் சபை தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.எம். ஹனபி, மீஸான் கம்பனி உரிமையாளர் இஹ்ஸான்தீன், சீனன்கோட்டை பள்ளிச் சங்க தலைவர் ராமிஸ் ஏ.கபூர், அதிபர் மஸ்னவியா ரிப்கான், தாருல் ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.ஜே.எம்.பஸ்லான் (அஷ்ரபி) அல் பாஸி, அரபுக் கல்லூரி முன்னாள் அதிபர் மௌலவி எம்.அபூபக்கர் (பாரி) உட்பட உலமாக்கள், கல்விமான்கள், பிரமுகர்கள் பலரும் பங்குபற்றினர். பவுண்டேசன் பொருளாளர் எம்.எல்.ஏ.அப்துல் அஹ்லா நன்றியுரை வழங்கினார்.

## வெலிகம பத்ர் அஹதியாவின் வருடாந்த பரிசளிப்பு விழா

(வெலிகம நிருபர்)

வெலிகம பத்ர் அஹதியா பாடசாலையின் 2015/2016 ஆம் ஆண்டுகளுக்கான பரிசளிப்பு விழா 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) வெபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அஹதியா பாடசாலை அதிபர் எம்.ஓ.பளுலுர் ரஹ்மான் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பிரதம அதிதியாக வெலிகம பிரதேச செயலாளர் ஸுமித் நிஷா கலந்து சிறப்பிக்கவுள்ளார். விஷேட அதிதியாக பேராதனை பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். இஸ்திகார் கலந்து கொள்கிறார்.

மேலும், கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள், பிரதேச அரசியல்வாதிகள் பலரும் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்ளும் இவ்விழாவில், மாணவர்களது கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

மேலும் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

## வீதி அனுமதிப்பத்திரம் இன்றேல் 2 லட்சம் ரூபா அபராதம்

வீதி அனுமதிப்பத்திரமின்றி ஓடும் தனியார் வாகனங்களுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த பத்தாயிரம் ரூபா அபராதத்தை இரண்டு லட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து சிவில் விமானச் சேவை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## சபாநாயகர் காத்தான்குடி விஜயம்

சபாநாயகர் கரு ஜயசூரிய, முதன்முறையாகக் காத்தான்குடிக்கு, எதிர்வரும் 10ஆம் திகதி விஜயம் செய்யவுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் 25 வருடகால அரசியல் வாழ்க்கையின் நிறைவையொட்டி எழுதப்பட்டுள்ள கிழக்கின் வாசல்' எனும் நூல் வெளியீட்டு விழாவில், பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவே, சபாநாயகர், காத்தான்குடிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி றமீஸ் தலைமையில், இந்த நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாணந்துறை அல்பஹ்ரியா மத்திய கல்லூரியின் விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழா அதிபர் எம்.எம். எம். கஸ்ஸாலி தலைமையில் இடம்பெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கௌரவ அதிதி பள்ளிவாசல் தர்மகர்த்தா எம்.ஸீ.எம். பௌஸ்ஹாஜி மற்றும் எம்.எஸ்.எம். நைசர் ஹாஜி ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்-எம்.எஸ்.எம். முன்தஸிர்)

## மௌலவி ஆசிரியர் நியமனம் இழுத்தடிப்பு ஏன்?

### மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார் கேள்வி

(வத்துகாமம் நிருபர்)

மனித வாழ்விற்கு அவசியமான சமயக் கருத்துக்களை மாணவர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தும் சமய ஆசிரியர் நியமனங்களில் மௌலவி ஆசிரியர் நியமனம் இழுத்தடிக்கப்படுவது கவலை தரும் விடயமாகும். இது தொடர்பாக மத்திய மாகாண சபை கூடிய கவனம் எடுத்தல்வேண்டும் என மாகாண சபை அங்கத்தவர் ஹிதாயத் சத்தார் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையின் மாதாந்த அமர்வு சபைத் தலைவர் எல்.டி.நிமலசிறி தலைமையில் நேற்றுமுன்தினம் பல்லேகலை மாகாண சபை மண்டபத்தில் இடம் பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டனர். அந்த வகையில் மத்திய அரசிற்கும் மாகாண அரசிற்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாறான பட்டதாரி நியமனங்களின் போது முஸ்லிம் பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டனர். அவர்களில் அநேகர் இஸ்லாம் சமய பாடத்தை தமது பட்டப்படிப்பிற்கு ஒரு பாடமாகக் கொண்டவர்கள். இதன் காரணமாக அவர்களைக் கொண்டு இஸ்லாம் மதம் தொடர்பான பாடங்கள் நடைபெற்ற போது இஸ்லாத்துடன் ஒன்றாகக் கலந்த அரபு மொழியை கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. இஸ்லாமிய நாகரீகத்தை ஒரு பாடமாகக் கொண்டு தமது பாடத்தை பூர்த்தி செய்தவர்களால் அரபு மொழி கற்பிக்க முடியாது. தொடர்ந்து அரபு மொழி முஸ்லிம் பாடசாலைகளில் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. காரணம் அதற்கான ஆசிரிய நியமனம் வழங்கப்படாமையாகும்.

காலம் சென்ற ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியாக இருக்கும் போது மௌலவி ஆசிரியர் நியமனம் இறுதியாக வழங்கப்பட்டது. அவர்கள் தற்போது ஓய்வு பெற்றும் விட்டார்கள். பாளி, சமஸ்கிருத மொழிகளுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளவாறு அரபு மொழிக்கும் உரிய இடம் பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டும்.

எனவே நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வரும் அரபு மொழி கற்பிக்கும் ஆசிரியர்களை நியமிக்க மாகாண சபை அழுத்தம் கொடுப்பதோடு நடவடிக்கையும் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## சின்னப்பாலமுனை அல்ஹிக்மாவில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்



(அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன், ஐ.எம். ஹம்தான்)

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக எதிர்காலத்தில் நாட்டுக்கு ஏற்ற நாளைய தலைவர்களை உருவாக்கும் நோக்கில் மாணவர்களின் ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்யும் நோக்கில் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் மாணவர் பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைவாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பிரிவின் அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை சின்னப்பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் நேற்றுமுன்தினம் பாடசாலையின் அதிபரும் பாடசாலையின் மாணவர் பாராளுமன்ற தேர்தல் ஆணையாளருமான எம்.எச். அப்துர் றஹ்மானின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நடைபெற்றது.

395 மாணவ வாக்காளர்களைக் கொண்ட மேற்படி பாடசாலையில் தேர்தல் மூலம் 45 மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக பாடசாலையின் சாதாரண மற்றும் கனிஷ்ட பிரிவு வகுப்புக்களிலிருந்து சுமார் 70 மாணவ, மாணவியர்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

இத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலை மாணவர்களது கல்வி, கலை, கலாசார மற்றும் சுகாதார இணைப்பாட விதான செயற்பாடுகளின் முன்னேற்றத்திலும் பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக சூழல் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

**உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர்** M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P: 077 2810009. WhatsApp: 077 9697790 Email - nrahmathullah786@yahoo.com


### தொழுகை நேரங்கள்

06.04.2017

| சுபஹ் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 4.50 | 12.14 | 3.16 | 6.19 | 7.30 |

கிழக்குமாகாணம் 6 நிமிடங்கள் கழித்து கணிப்பிடவும்

## தொட்டவத்தை பாஸிய்யாவில் பரிசளிப்பும் மாணவர், ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கலும்





(சபீதார்)

பாணந்துறை, தொட்டவத்தை பாஸிய்யா மத்ரஸாவின் 16ஆம் ஆண்டு நிறைவு விழா பரிசளிப்பு, இலவச சீருடை விநியோகம் ஆகிய நிகழ்வுகளோடு அல் பஹ்ரிய்யா கேட்போர் கூடத்தில் பள்ளிவாசல்கள் சம்மேளன தர்மகர்த்தா எம்.ஸீ.எம். பௌஸ் ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது.

மாணவர் எம்.யூ. உமரின் கிராத்துடன் எம்.ஐ.எப். ஸுஹா, எம்.எச். ஸஹத், எப். சமீஹா, எம்.ஜே.எப். அஸ்மா, எப். மிப்ரஹா ஆகியோரின் தனி நிகழ்ச்சிகளோடு கஸீதா, முனாகரத்து போன்ற சிறப்பம்சங்களும் வைபவத்தில் களை கட்டின.

மத்ரஸா நிர்மாணிப்போடு தொடர்ந்து அனுசரணை வழங்கி வந்த மல்டிலக் உரிமையாளர் மர்ஹூம் மக்கீன் ஹாஜியார் மற்றும் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டு வபாத்தான முன்னோடிகளுக்கான துஆப் பிரார்த்தனையும் நிகழ்வில் சிறப்பிடம் பெற்றது.

மத்ரஸா பணிகளில் நீண்டகாலமாக அர்ப்பணிப்புச் செய்து வரும் பணிப்பாளர் ஏ.ஜே. அகமட் பளீல், மத்ரஸா அதிபர் எம். உவைஸ் (அல்பஹ்ரியா பிரதிஅதிபர்) ஆகியோர் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வைபவத்தில் சிறப்பதிதியாகக் கலந்து கொண்ட மௌலவி காத்தான்குடி பௌஸுல் வைபவத்தில் மல்டிலக் நிறுவனத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

அகமட் பளீல் எழுதிய இலவச கைநூல் ஒன்றும் வெளியிட்டு விநியோகிக்கப்பட்டது.

பிரதி கல்விப்பணிப்பாளர் எம்.ரீ.எம். இல்யாஸ், மௌலவிகளான எம். ரிப்கான், எம்.கே.எம். இல்யாஸ், விவாகப் பதிவாளர் எம். இம்தியாஸ், மல்டிலக் நிறுவன உரிமையாளர் சார்பாக எம். இஸ்மாயில் மற்றும் மருமகன், எம். இப்திகார் ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களையும் இலவச சீருடைகளையும் வழங்கி வைத்தனர்.

மர்ஹூம் மக்கீன் ஹாஜியார் குடும்பத்தினரால் மத்ரஸா மாணவ மாணவியர் மற்றும் ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடைகள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# முசலி மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்த வேண்டாம்

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

தமது பூர்வீக வாழ்விடங்களை பாதுகாப்பதற்காக கடந்த பல நாட்களாக போராடி வரும் முசலிப் பிரதேச முஸ்லிம்மக்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கான கள விஜயமொன்றினை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டது.

இதில், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியிலாளர் அப்துர் ரஹ்மான், அதன் செயலாளர் நஜாமுஹம்மத், அதன் தலைமைத்துவ சபை உறுப்பினர் உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் உட்பட ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர். மன்னார், முசலிப் பிரதேசத்தின் தென்பகுதிக் கிராமங்களான மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி, கொண்டச்சி, அகத்திமுறிப்பு வேப்பங்குளம் ஆகிய கிராமங்களைச் சூழவுள்ள பகுதிகளை, வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப்படுத்தியமையை எதிர்த்து,




கடந்த ஒன்பது நாட்களாக பாதிக்கப்பட்ட மக்கள் போராடி வருகிறார்கள். இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், அம்மக்களோடு கலந்துரையாடி உண்மையில் அங்கு என்ன நடைபெற்றுள்ளது என்பதை அறியும் நோக்கிலேயே NFGGயினால்இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மறிச்சுக்கட்டி பள்ளிவாசலுக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை சந்தித்த நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்கள், அவர்களின் போராட்டத்திற்கு பூரணஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

மேலும், NFGGயின் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் மனிதாபிமானத்திற்கு எதிரான ஒரு செயலாகும்.

எனவே, இதன் மூலம் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு நீதிகிடைக்க வேண்டும். அவர்களுக்கு நீதி கிடைப்பதற்காக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தம்மாலான அனைத்து முயற்சிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கும். இவ்வாறே, 2014 ஆம் ஆண்டும் மறிச்சுக்கட்டியின் மரைக்கார் தீவு மக்களின் காணிகளை அரசாங்கம் அநியாயமாக பறித்துள்ளமையை அறிந்து நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் உடனேஅவ்விடயத்திற்கு விஜயம் செய்து தமது பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கினர். இறுதியில் சிறந்த தீர்வின்றி மக்கள் தங்களது போராட்டத்தை கைவிட்டனர். அவ்வாறு இப்போராட்டத்தை இம்முறையும் கைவிட்டுவிட வேண்டாம். அத்தோடு, முஸ்லிம் அரசியல் தலைமைகள் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள மனிதாபிமான மீறலை கண்டிப்பதோடு, இவர்களது போராட்டத்திற்கு பூரண ஆதரவையும் வழங்க வேண்டும்.

அத்தோடு, இவர்களின் மண் மீட்புப் போராட்டத்தை தமது சொந்த அரசியலாக்கி கொச்சைப்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்தோடு, சர்ச்சைக்குரிய புதிய வர்த்தமானி அறிவுப்புக்கிணங்க வன பாதுகாப்பு பிரதேசத்தின் புதிய எல்லைகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பதனையும், அது எவ்வாறு மக்களின் வாழிடங்கள், பயிர்ச்செய்கை காணிகள், மற்றும் மேய்ச்சல் பூமிகள் என்பவற்றை பாதிக்கப்போகின்றன என்பதனையும் உரிய இடங்களுக்கு சென்று NFGG குழுவினர் பார்வையிட்டனர்.

## குற்றங்களை தடுக்க புதிய பொலிஸ் திட்டம்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் விசேட போக்குவரத்து திட்டமொன்றும் குற்றத்தடுப்பு வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படுமென்று பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இத் திட்டம் கடந்த 4 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் இறுதி வரை அமுல்படுத்தப்படும். எந்த சிரமமும் இன்றி மக்கள் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு சந்தர்ப்பம் அளிப்பது இதன் நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதிக்குள் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக மதுபோதையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்காக நடமாடும் வாகன மற்றும் மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் அவசர அழைப்பு பிரிவு 24 மணி நேரமும் இயங்கவுள்ளதாகவும், அதனடிப்படையில் 0112326229, 0112451379 என்ற இலக்கத்தினை தொடர்புகொண்டு தெரியப்படுத்தலாம்.

## மத்திய மாகாண எதிர்க்கட்சி தலைவர் சானக ஜலப்பெரும

மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்ட உறுப்பினர் சாணக ஜலப்பெருமவை நியமிப்பதற்கு ஐ.தே.க.செயற்குழு நேற்று தீர்மானித்தது. எதிர்க்கட்சி அமைப்பாளராக மாத்தளை மாவட்ட உறுப்பினர் ரோஹன பண்டாரநாயக்கவை நியமிப்பதற்கும் செயற்குழு தீர்மானித்ததாக ஐ.தே.க பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்தார். ரேனுகா ஹேரத்தின் மறைவையடுத்து இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டன.

# பிரதமரின் அரசியல் வாழ்வு நூல் வெளியீட்டு விழா



என்னுடைய அரசியல் வாழ்க்கை தொடர்பான நூலை எழுதிய புகழ்பெற்ற பொருளாதார விமர்சகர் தினேஷ் வீரகொடி நான் எதிர்பார்த்ததுக்கும் மேலாக ஆராய்ந்து எழுதியுள்ளார். அவ்வாறான உண்மைகளை அறிந்து கொள்வதற்கு அதிகளவில் முயற்சித்துள்ளார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நேற்றுமுன்தினம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கை தொடர்பான நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய பிரதமர் மேலும் கூறியதாவது,

என்னுடைய அரசியல் வாழ்க்கை தொடர்பில் நான் இங்கு பேசப்போவதில்லை. ஆனால் அரசியலில் ஆரம்பம் தொட்டே என்னுடன் குழுவொன்று இருந்தது.

அவர்கள் தான் தற்போது பாராளுமன்றில் இருக்கும் ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன், தற்போது பாராளுமன்றில் இல்லாத தயாரத்ன மற்றும் என்னுடைய வாழ்வின் ஆரம்பம் தொட்டு உள்ள கலபொட ஞானீஸ்ஸர தேரர் ஆகியோரும் பெயர் குறிப்பிடாவிட்டாலும் தற்போதும் என்னோடு இருக்கின்றார்கள்.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டுக்கு நிரந்தமான சமாதானத்தை பெற்றுகொள்ளவும், சிறந்த அபிவிருத்தியை பெற்றுகொள்ளவும், 30 வருட யுத்தத்தில் இல்லாமல் போனவற்றை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு கலந்துரையாடல், ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு ஆகியன தேவைப்படுகின்றன.

மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக தெரிவாகி தேர்தலில் வெற்றிபெற்றமைக்கு ஏதுவாக தேசிய அரசு உருவானது.

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகள் 5 வருடத்தில் சிறந்த ஒத்துழைப்பில் வேலைசெய்தால் அதுவே நாட்டின் சிறந்த வெற்றியாகும்.

மேலும், எதிர்க்கட்சி தலைவருடன் மற்றும் அனைத்து எதிர்க்கட்சி குழுக்களுடன் சேர்ந்து கலந்துரையாடினால் எதிர்வரும் காலங்களில் நாட்டிற்கு சிறந்த கௌரவம் கிடைக்கும்.

இந்த 5 வருடக்காலத்தில் புதிய அரசியல் கலாசாரம், இலங்கையின் அடையாளம் அதேபோன்று பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்தினால் நாம் முன்னோக்கி செல்லலாம் என்றும் கூறினார். சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட பெருந்தொகையான அரசியல் பிரமுகர்கள் ஐ.தே.க. முக்கியஸ்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் இரட்டைப் படுகொலை; அறுவருக்கும் விளக்கமறியல்

(ஏறாவூர் நிருபர் -
ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஏறாவூரில் தாய் மற்றும் மகளை இரட்டைப் படுகொலைச் சந்தேக நபர்கள் அறுவரும் ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக
நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஷ்வி உத்தரவிட்டார்.

ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்துவந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (56) அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (32) ஆகியோர் கடந்த செப்டெம்பர் 11ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களும் கடந்த செப்ரெம்பெர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக விளக்கமறியல் உத்தரவில் இருந்து வருகின்றனர்.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் ஒழுங்கையைச் சேர்ந்த இஸ்மாயில் முஹம்மது பாஹிர் (24 ), அப்துல் மஜீத் மாவத்தை ஐயங்கேணியைச் சேர்ந்த உஸனார் முஹம்மது தில்ஷான் (29), பாடசாலை வீதி மீராகேணியைச் சேர்ந்த கலீலுர் ரஹ்மான் அஹம்மது றாசிம் (23), பள்ளியடி வீதி, காவத்தமுனை, ஓட்டமாவடியைச் சேர்ந்த புஹாரி முஹம்மது அஸ்ஹர் (23), ஏறாவூர் நகர் போக்கர் வீதியைச் சேர்ந்த இஸ்மாயில் சப்ரின் (30) மற்றும் ஏறாவூர் காட்டுப்பள்ளி வீதியைச் சேர்ந்த அபூபக்கர் முஹம்மது பிலால் (50) ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
06TH APRIL 2017 - THURSDAY

# தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தருக்கு கொலை அச்சுறுத்தல் ஏன்?

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிமுக்கு நான்கு முறை கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 19ஆவது வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் உரையாற்றுகையில் பேராசிரியர் நாஜிமே இதனைத் தெரிவித்துள்ளார்.

தான் இங்கு நேர்மையான உபவேந்தராகக் கடமையாற்றுவதற்குப் பரிகாரமாகவும் களவு செய்யவில்லை என்பதற்காகவும் கொலன்னாவையிலுள்ள பாதாள உலகப் பயங்கரவாதிகளைப் பயன்படுத்தி தன்னுடைய பிள்ளைகளைக் கடத்தப் போவதாகவும் எங்களைக் கொலை செய்யப் போவதாகவும் பேராசிரியர் நாஜிம் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் நாஜிமின் இந்தக் கூற்றில் அவரை ஏன் கொலை செய்ய முற்படுகிறார்கள் என்பதற்கான காரணம் பொதிந்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கடந்த காலங்களில் ஊழல்கள் மலிந்த ஓர் இடமாகவே காணப்பட்டது. இந்த ஊழல்கள் பற்றி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமான பூடா செய்த முறைப்பாடு பற்றி பொலிஸாரும் இரகசியப் பொலிஸாரும் விசாரணைகளை நடத்தினர்.

இந்த விசாரணைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையே நீடிக்கிறது.

இந்தப் பின்னணியில் புதிதாகப் பதவியேற்ற உபவேந்தர், ஊழல்களற்ற முறையில் பல்கலைக்கழக நிர்வாகத்தை முன்னெடுத்து வருவதனை விரும்பாத சக்திகளே இந்தக் கொலை அச்சுறுத்தலை விடுத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு, முஸ்லிம் பிரதேசத்திலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் ஊழல் மோசடிகள் நடைபெறுவது நல்லதல்ல.

இப்பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை கொலை அச்சுறுத்தல் என்பது புதியதல்ல. இதற்கு முன் உபவேந்தராக இருந்த பேராசிரியர் ஏ.ஜி. ஹுஸைன் இஸ்மாயிலுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு ஒரு முறை அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

நாட்டின் ஏனைய இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் உபவேந்தர்களுக்கு இப்படியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதில்லை.

அரசியல் காரணத்திற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக இருந்த பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர கொல்லப்பட்டார். ஆனால் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஊழல் பேர்வழிகளுக்குத் தவறான வழிகளில் பணம் சம்பாதிக்கும் கதவுகளை உபவேந்தர் மூடியிருப்பதனால் பாதிக்கப்பட்டவர்களே இந்த அச்சுறுத்தலை விடுத்திருக்கலாம்.

அரசாங்கம் இது குறித்து தீவிரமாக ஆராய்ந்து யார் இந்த கயவர்கள் என்பதைத் தேடி சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

உபவேந்தர் நாஜிம் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பல புதிய வசதிகள், பாடநெறிகளைப் பெற்று முன்னேறி வரும் நிலையில், இந்த அச்சுறுத்தல்களை அவற்றுக்குப் போடும் தடைகளாகவே நோக்கலாம்.

சட்டம் இது குறித்து விசேட கவனம் செலுத்துவது அவசியம் என்பதனை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

# இலங்கைக்கான சீன - இந்திய யுத்தம்

ஆங்கிலத்தில் - சவ்ராவ் ஜஹா

தமிழில் - நித்தியபாரதி




இலங்கை மீது செல்வாக்குச் செலுத்துவது தொடர்பில் சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இலங்கை மீதான கடன் சுமை அதிகரித்த நிலையில் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான மோதலை சமன்செய்து அதன்மூலம் தன் மீதான நிதி நெருக்கடியை குறைப்பதற்கு இலங்கை முயற்சிக்கிறது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான உடன்பாடு ஒன்றை எட்டியுள்ளதாக கடந்த ஜனவரியில், இலங்கையின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார். இலங்கையின் பொருளாதாரத்தில் சீனாவின் தலையீடு அதிகரித்துவரும் நிலையில் இந்தியாவை அமைதிப்படுத்துவதற்காகவே திருகோணமலை துறைமுக உடன்பாடு எட்டப்பட்டதாக இலங்கையர்கள் கருதுகின்றனர்.

இலங்கை தீவானது தற்போது 64 பில்லியன் டொலர் கடன்சுமையை எதிர்நோக்கியுள்ளது. அத்துடன் பாரிய சில திட்டங்களை மேற்கொள்வதற்காக சீனாவிடமிருந்து இலங்கையால் 8 பில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய வருடாந்த வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதி நிதியானது கடனை மீளச் செலுத்துவதற்கு வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அனைத்துலக நாணய நிதியத்திடமிருந்து 1.5 பில்லியன் டொலர் நிதி இலங்கையினால் கடனாக பெறப்பட்டுள்ளது. பொதுச் செலவை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக மட்டுமே இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என அனைத்துலக நாணய நிதியத்தால் அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான பல்வேறு கடன்சுமைகள் இருப்பினும், பரிந்துரைக்கப்பட்ட சீன முதலீடுகளுக்கு எதிராக இலங்கை வாழ் மக்கள் எதிர்ப்புக்களை காண்பித்து வருகின்றனர். தமது நாட்டில் சீனக் காலனித்துவம் வந்துவிடுமோ என இலங்கையர்கள் அஞ்சுகின்றனர்.

சீனா மீது இலங்கை தங்கியிருக்கும் நிலையை சமன்செய்ய வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இலங்கை மீதான சீனாவின் பிரசன்னமானது இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்ற விடயத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விட தற்போதைய ஜனாதிபதி அதிகம் கவனம் கொண்டுள்ளார்.

இந்தியாவானது தனது இராணுவ மற்றும் பொருளாதார ஆதரவுகளை இலங்கைக்குள் வழங்கியுள்ள போதிலும், இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பில் இந்தியா பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகிறது. இந்திய அரசாங்கத்தால் திருகோணமலை துறைமுக அபிவிருத்தித் திட்டம் போன்ற நடுத்தர திட்டங்களை வேறு நாடுகளில் செய்வதற்கான இயலுமையை கொண்டிருக்கவில்லை.

ஆகவேஇ இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஜப்பானிய முதலீட்டாளர்களுடன் இணைந்து தனியார் துறையால் இலங்கையின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இத்திட்டத்தை முன்னெடுக்க முடியுமா என்பதை இந்தியா ஆராய்ந்து வருகிறது.

சீன நிறுவனங்களால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான திட்டங்களின் ஊடாக இலங்கை மீதான கடன் சுமையை குறைப்பதற்கும் இதன் மூலம் இலங்கையுடனான பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்துவதற்கும் சீனா முயற்சிக்கிறது. பாதுகாப்புத் துறை உட்பட அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்பு அதிகரிக்கப்படவுள்ளதாக கடந்தவாரம் இவ்விரு நாடுகளும் அறிவித்தன. இது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கையை எதிர்த்து இலங்கையில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையில் சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் பாதுகாப்புத்துறை உட்பட அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்பை அதிகரிக்கவுள்ளதாக இவ்விரு நாடுகளும் அறிவித்தல் மேற்கொண்டமையானது சீனா தனது 'ஒரு அணை ஒரு பாதை' என்ற திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான நல்லதொரு சமிக்ஞையாக நோக்குகிறது.

சீனாவால் கட்டப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 சதவீதத்தை 99 ஆண்டுகால குத்தகைக்கு 1.1 பில்லியன் டொலர் பெறுமதிக்கு சீன நிறுவனத்திடம் வழங்குவதற்கு கடந்தாண்டு மைத்திரி அரசாங்கம் உடன்பட்டது. அத்துடன் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அருகிலுள்ள 15,000 ஏக்கர் நிலப்பரப்பை 5 பில்லியன் டொலர் பெறுமதியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், இலங்கையர்கள் இத்திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டமையால் இலங்கை அரசாங்கத்தால் இதுதொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியவில்லை. சீனாவிடம் பெருந்தொகையான கடனை இலங்கை பெற்றிருந்தாலும் கூட, தனது நாட்டில் சீன இராணுவம் கால்பதிப்பதற்கு மைத்திரி அரசாங்கம் இதுவரை அனுமதிக்கவில்லை.

ஆனால், சீனாவுடன் இலங்கையானது பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கவுள்ளதாக அண்மையில் வெளிவரும் செய்திகள் தெரிவிக்கும் நிலையில் சீனக் கடற்படையினர் இலங்கையின் கடலில் செல்வாக்கு செலுத்துவதற்கான ஆபத்து உருவாகும். மஹிந்த ஆட்சியின்போது 2014இல் கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நிற்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இது இந்தியாவுக்கு எச்சரிக்கை மணியை எழுப்பியது.

2015இல் இடம்பெற்ற தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியுற்ற பின்னர், இந்திய மாக்கடல் மீதான இந்தியாவின் பன்முக கடல்சார் பாதுகாப்பு முயற்சிகளில் இலங்கையும் பங்களித்தது. இதற்காக இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு மேலும் பல கடல்சார் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கடற் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கான கலத்தை கொள்வனவு செய்வதற்கு இலங்கையின் தொழிற்துறைக்கு இந்தியா உதவியது.

இலங்கைக்கான இந்தியாவின் அபிவிருத்தி உதவியானது 2.6 பில்லியன் டொலராகும். 435 மில்லியன் டொலர் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. சீனா இலங்கைக்கு தான் கொடுத்த 50 சதவீத கடனுக்கு 2 சதவீத வட்டியையும் மீதிக் கடனுக்கு 5 சதவீத வட்டியையும் அறவீடு செய்கிறது. ஆனால் இந்தியாவானது இலங்கைக்கு தான் வழங்கிய அனைத்து கடனுக்கும் 1.75 சதவீத வட்டியையே அறவீடு செய்கிறது.

அத்துடன் இலங்கை மீதான இந்திய முதலீடுகளும் பிரச்சினைகளை சந்தித்துள்ளன. திருகோணமலை துறைமுகத்துக்கு அருகிலுள்ள சம்பூரில் நிலக்கரி மின்னாலை ஒன்றை நிறுவுவதற்கான இந்தியாவின் திட்டமானது சம்பூர் மக்களின் எதிர்ப்பின் பின்னர் கைவிடப்பட்டது. இலங்கைத் தீவின் மேற்கு கரையிலுள்ள கெரவலப்பிட்டியவில் எரிவாயு மின்னாலை ஒன்றை அமைத்து தருமாறு தற்போது இலங்கை இந்தியாவிடம் கோரிக்கை விடுத்து வருகிறது.

கொழும்பு துறைமுக விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக அங்கே கொள்கலன் தாங்கி ஒன்றை அமைப்பதற்கு அனுமதியை பெறுவதற்கு இந்தியா முயற்சிக்கிறது. 2013இல் தனியொரு கொள்கலன் தாங்கி ஒன்றை அமைப்பதற்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

2003இல் இருந்து இந்தியாவின் லங்கா இந்திய எண்ணெய் நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் திருகோணமலையிலுள்ள 99 எண்ணெய் குதங்களையும் இலங்கை மீளவும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் எந்தவொரு குத்தகை ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படாமையால் இவற்றை மீளப்பெறுமாறு பொது நிறுவனங்கள் மீதான இலங்கை பாராளுமன்ற ஆணைக்குழு அண்மையில் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஆகவே, இவற்றை பயன்படுத்துவதற்கான கட்டணத்தை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ள இலங்கை முயற்சிக்கும். சீனாவுடன் இலங்கையானது பல்வேறு முதலீட்டு திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதானது, தனது கடன் சுமையை குறைப்பதற்கு இந்தியா மேலும் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான ஒரு சமிக்ஞையை இலங்கை அனுப்பியுள்ளது என்றே நோக்கலாம்.

இந்திய அரசாங்கம் தனது செலவீனங்களை குறைப்பதற்காக, தனது தனியார் துறையின் ஊடாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முயற்சிப்பதுபோல் தென்படுகிறது. அத்துடன் இந்திய அரசின் திட்டங்கள் சில இலங்கையில் நெருக்கடியை சந்தித்த போதிலும் தனியார் துறையினர் வெற்றிகரமாக தமது திட்டங்களை இலங்கையில் மேற்கொண்டுள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்தை சூழவுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூற்று ஆய்வை சிங்கப்பூரின் சேர்பனா யுரோங்க் நிறுவனம் மேற்கொண்டுவரும் நிலையில் இந்நிறுவனத்துடன் இணைந்து இந்திய தனியார் நிறுவனங்கள் பணியாற்றுவதற்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது.

கிழக்கிலுள்ள திருகோணமலையில் இந்தியா முதலீடு செய்வதன் மூலம் அங்கு தமிழ் மயமாக்கல் முற்றுமுழுதாக இடம்பெற்று விடும் என உள்ளூர் மக்கள் அச்சம் கொண்டுள்ள நிலையில், இலங்கையில் தமிழர் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு இந்தியா ஒருபோதும் அழுத்தம் வழங்காது என அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவித்திருந்தார்.

உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் வரையப்பட்ட 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கில் சுயாட்சியை நிறுவுவது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்தையும் வெளிநாடுகள் தமது இராணுவ நோக்கத்துக்காக பயன்படுத்துவதற்கு இலங்கை ஒருபோதும் அனுமதிக்காது என சீனாவுக்கான இலங்கை தூதுவர் அண்மையில் தெரிவித்திருந்தார். இலங்கையின் இத்தகைய நிலைப்பாட்டை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள இந்தியா மேலும் பணியாற்ற வேண்டும் என்பதை இந்தியா தற்போது உணர்ந்துள்ளது.



# மைத்திரியை தோற்கடிக்க சதி செய்தோர் பிரதமரையும் ஐ.தே.கவையும் விமர்சிக்கின்றனர்

## முஜிபுர் றஹ்மான் எம்.பி



மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கிய பெருமை எங்களுக்குரியதே. இன்று ஸ்ரீ.ல.சு.கட்சியினர் மைத்திரியை தங்களது ஜனாதிபதி என்று சொல்லிக் கொண்டு ஐ.தே.கட்சியையும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் விமர்சிக்கின்றனர். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவை தோற்கடிக்க சதி செய்து திரிந்தவர்களே இன்று நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்து கொண்டு மைத்திரியைப் போற்றிக் கொண்டு ஐ.தே. கட்சியை விமர்சித்து வருகின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் கூறியுள்ளார்.

மத்திய கொழும்பு மாணவர்கள் ஐயாயிரம் பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு, மாளிகாவத்தை பி.டீ. சிறிசேன விளையாட்டரங்கில் இடம் பெற்றது. நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உரையாற்றிய முஜிபுர் றஹ்மான் தனதுரையில்,

மத்திய கொழும்பு மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்பவர்கள். இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் கல்விப் பிரச்சினை மிகப்பிரதானமானதாகும். கடந்த இருபது வருட காலமாக மத்திய கொழும்பு மக்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளார்கள். பலவித பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழும் மத்திய கொழும்பு மக்களை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகளை அவசரமாக முன்னெடுக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

இன்றைய தினம் செல்வங்களில் மிகப்பெரிய செல்வமான கல்விச் செல்வத்தை பெறும் மாணவர்களுக்கு உதவிகளை வழங்குவதை ஒரு பாக்கியமாக நான் கருதுகிறேன். மத்திய கொழும்பு மக்களின் கல்வி முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து பல வேலைத்திட்டங்களை நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

இன்று நல்லாட்சியின் அமைச்சு பதவிகளில் இருந்துகொண்டே சிலர் ஆட்சியை விமர்சித்து வருகின்றனர். குறிப்பாக ஐ.தே. கட்சியையும் அதன் தலைவர்களையும் விமர்சித்து வருகின்றனர். குறித்த அமைச்சர்களின் செயற்பாடுகள் நகைப்புக்குரியதாகும். மைத்திரிபால சிறிசேன மஹிந்த ஆட்சியிலிருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்தே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவிற்கு குழி பறித்தவர்கள், அவரை தோல்வியடையச் செய்ய அயராது பாடுபட்டவர்கள் அமைச்சர்களாகி இன்று நல்லாட்சியையே விமர்சித்து வருகின்றனர். இன்று நல்லாட்சியின் முக்கிய அங்கமாக இருக்கும் ஐ.தே.கட்சியை வீழ்த்துவதற்கு இவர்கள் சதிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு ஒன்றை நாம் ஆணித்தரமாக சொல்லி வைக்க விரும்புகிறோம். மைத்திரியை ஜனாதிபதியாக்கிய எங்களுக்கு நல்லாட்சியை உருவாக்கிய எங்களுக்கு அதனை பாதுகாக்கும் திறனும் சக்தியும் இருக்கிறது. எந்த சதிகளையும் சவால்களையும் முகம் கொடுக்கக் கூடிய சக்திவாய்ந்த கட்சியாக ஐ.தே.கட்சியிருக்கிறது என்றும் முஜிபுர் றஹ்மான் கூறினார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தனதுரையில் ஐக்கிய தேசியக் கட்சியை கடந்த காலங்களில் பாதுகாத்த பெருமை மத்திய கொழும்பு மற்றும் வட கொழும்பு மக்களுக்கிருக்கிறது. கட்சிக்கு சோதனை மிகுந்த காலங்களில் இம்மக்கள் கட்சியை கட்டிக்காத்துள்ளார்கள். நல்லாட்சியை அமைப்பதில் இவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும் என்று குறிப்பிட்டதோடு இம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் அயராது செயற்படும் என்றும் கூறினார்.



க.பொ.த.சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளின் படி இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி மாணவி எம்.எம்.நஸ்றத் சஹாமா 9ஏ சித்தியினைப் பெற்று சாதனை படைத்துள்ளமைக்காக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சௌத்துல் நஜீம் கல்லூரிக்கு விஜயம் செய்து குறித்த மாணவியைப் பாராட்டி கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படம். அதிபர் எஸ்.எம்.இஸ்மாயில், இறக்காமம் கோட்டகல்வி அதிகாரி யூ.எல்.மஹ்மூது லெப்ப, பிரதி அதிபர் ஹிதாயா மீராலெப்ப உட்பட மாணவியின் பெற்றோரும் காணப்படுகின்றனர். (படம்:-இறக்காமம் நிருபர்)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட இ.போ.ச., தனியார் பஸ் சேவைகள்

( மினுவாங்கொடை நிருபர் )

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, பயணிகளின் வசதி கருதி, கொழும்பு - புறக்கோட்டை பிரதான இ.போ.ச. பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்குச் செல்வதற்கும், அவ்விடங்களிலிருந்து மீண்டும் கொழும்புக்கு திரும்பி வருவதற்குமான விசேட இ.போ.ச. பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளதாக, இ.போ.ச. மத்திய நிலையத்தின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார். நாளை 7ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை மேலதிக பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு, இரவு நேர விசேட பஸ் சேவைகள் நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். தற்போது நாடு முழுவதும் சேவையில் ஈடுபடுத்த, இ.போ.ச. பஸ் டிப்போக்களில் 3,900 பஸ் வண்டிகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ் சேவைகள், எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில்,

இது தொடர்பில் பஸ் சங்கங்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியவற்றுடனான பேச்சுவார்த்தைகள், திருப்திகரமான முறையில் இடம்பெற்றுள்ளதாக, இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பி.ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

மேலும், பயணிகள் '1955 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக, தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். பண்டிகைக் காலத்தில், பயணிகளிடம் மேலதிக கட்டணங்களை அறவிடல், பயணச் சீட்டுக்கள் (டிக்கட்) வழங்காமல் இருத்தல், பயணிகளை முறையாகக் கவனிக்காது விடல் என்பன குறித்தும் விசேடமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும், ஆணைக் குழுவின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



காலி அல் அக்ஸா கல்லூரியில் (ஆரம்ப பிரிவு பாடசாலை) நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும் புதுவருட கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் மாணவர்கள் கலந்து கொண்டதையும் படங்களில் காணலாம். (பீ.எம்.சாகிர் ஹுஸைன் காலி)

## என்பீல்ட் வித்தியாலய மாணவர்களின் ஒன்றுகூடல்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

டிக்கோயா என்பீல்ட் தமிழ் மகா வித்தியாலயத்தில் 2006 ஆம் கல்வி பொதுத்தராதர சாதாரணதரத்தில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களின் 11 வருடங்களின் முதலாவது ஒன்றுகூடல் நிகழ்வானது எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை இடம்பெறவுள்ளது.

2006 ஆம் ஆண்டில் கல்வி பொதுத்தராதர சாதாரண தரத்தில் பயின்ற மாணவர்களை 11 வருடங்களின் பின்னர் ஒன்றிணைந்து மீண்டும் பள்ளிக்கு போகலாம் எனும் தொனிப்பொருளில் 16.04.2017 அன்று காலை 9.00 மணிமுதல் அட்டன் டைன் எண்ட் ரெஸ்ட் விருந்தகத்தில் இடம்பெறவுள்ள குறித்த ஒன்று கூடல் நிகழ்வில் வகுப்பில் கல்வி பயின்ற மாணவ நண்பர்களும் கற்பித்த ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சாய்ந்தமருது தைபா அரபுக் கல்லூரி ஏற்பாட்டில் தஹ்வா கருத்தரங்கு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளுக்கு சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியின் ஏற்பாட்டில் அண்மையில் சாய்ந்தமருது பாரடைஸ் மண்டபத்தில் இஸ்லாமிய தஹ்வா கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக அரபு, இஸ்லாமிய பீடாதிபதி அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.மஸாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன் கல்குடா தஹ்வா நிறுவனப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர்முஹம்மத் வளவாளராக கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்தினார்.

பாடசாலை மாணவிகளை பிழையான சிந்தனையிலிருந்து நெறிப்படுத்துதல் எனும் கருப்பொருளில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் பங்குபற்றிய மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் இக்கல்லூரியில் மௌலவியா பட்டம் பெற்று வெளியேறியுள்ள ஆறு மாணவிகளுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான அஷ்ஷெய்க் கே.எல்.ஆதம்பாவா, அஷ்ஷெய்க் எச்.எம்.ஏ.ஜப்பார் ஆகியோரும் உரையாற்றினர்.

## வடக்கில் வேலையற்ற பட்டதாரிகளின் நடைபவனி

(யாழ். பாறுக் ஷிஹான்)

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்பு கோரி கவனயீர்ப்பு நடைபயணம் ஒன்றினை நேற்றுக்காலை யாழ். பல்கலைகழக முன்றலில் இருந்து ஆரம்பித்தனர்.

கடந்த 38 ஆவது நாளாக யாழ் மாவட்ட செயலகம் முன்னால் போராடி வந்த இப்பட்டதாரிகள் தமது போராட்டத்தை வலியுறுத்துவதற்காக இந்நடைப்பயணத்தை மேற்கொண்டனர்.

இந்த நடைப்பயணமானது யாழ் பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பமாகியதுடன் யாழ். பலாலி வீதியுடாக சென்று யாழ். ஸரான்லி வீதியை அடைந்து பின்னர் மத்திய பேருந்து நிலையம் ஊடாக சென்று அங்கு இருந்து யாழ் ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ் மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது.இதில் பல கோரிக்கைகளை வலியுறுத்தியவாறு வேலையற்ற பட்டதாரிகள் கோஷமிட்டனர். தொடர்ந்து மாவட்ட செயலகத்தை அடைந்த நடைப்பயணம் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுகுணரதி தெய்வேந்திரம் மகஜர் ஒன்றை கையளித்த பின்னர் நிறைவடைந்தது.

இதன் போது வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம் மன்னார் வவனியா முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வேலையில்ல. பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

# பாணந்துறையில் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரிப்பரீட்சை

( பாணந்துறை நிருபர்-எம்.கே. எம்.அஸ்வர்)

கொழும்பு ஈ.டீ.எப். நிறுவனத்தின் அனுசரணையோடு பாணந்துறை கல்விஅபிவிருத்தி சங்கம் தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் நலன்கருதி வருடாந்தம் நடாத்திவரும் மாதிரி ப்பரீட்சையின் முதல் பரீட்சை ஜீலான் மத்தியகல்லூரியில் நடைபெற்றது. இதில் அதிக பள்ளிகளைப்பெற்று முதல் பத்து இடங்களைப்பெற்ற மாணவர்கள் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இரண்டாவது பரீட்சை அண்மையில் அம்பலந்துவை இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப் பரீட்சையின் நிறைவில் மேற்படி மாணவர்களுக்கு பரிசுகள் கையளிக்கப்பட்டன.



பாணந்துறை,பண்டாரகமை தொகுதிகளில் அமைந்துள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் இப்பரீட்சையில் பங்குபற்றினர்.

இவ்வைபவத்தில் அதிதிகளாக கலந்து கொண்ட களுத்துறை கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர். எம்.ரீ.எம்.இல்லியாஸ், இல்மா முஸ்லிம் வித்தியாலய. அதிபர் ரிஸ்மி மஹ்ரூப், ஜீலான் மத்திய கல்லூரி உதவி அதிபர் எம்.எஸ்.எம்.சல்மான், அலவிய்யாமுஸ்லிம் மகா வித்தியாலய உதவி அதிபர் எம்.தாலிப்,பஸ்மில் கான் ஆசிரியர், வர்த்தகபிரமுகர் எம்.ஜீ.எம். இஸ்மத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பரிசுபெற்ற மாணவர்கள்எப்.ரிதாஹ்-167 புள்ளிகள்-அலவிய்யா ம.வி.,எப். ஸஹ்ரா-(162 ). அல்பஹ்ரியா,ஹாஜா நஜிமுதீன்-156- ஜீலான்,எப். ஸாரா-154 - அல்பஹ்ரியா,எம். உஸ்மான்-153-அல் பஹ்ரியா,எப். ஷபிய்யா 149 -அல் கஸ்ஸாலி ம.க.எப். ஆதிகா -148- அல் கஸ்ஸாலி ,ஆதில் அஹமட் 148-அல் பஹ்ரியா,ஏ.ஸீ.அபீர் -147-இல்மா மு.வி.இஸ்மத் முகம்மத்-146-களுத்துறை,ஆஷிக். 146 ஜீலான்.

## சுற்றுலா சபையின் பணிப்பாளராக சர்ஜூன் அபூபக்கர்

கிழக்கு மாகாண சுற்றுலா சபையின் பணிப்பாளராக சர்ஜூன் அபூபக்கர் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டினால் நேற்று (5) முதல் நியமிக்கப்பட்டுள்ளார்

கிழக்கு மாகாண சுற்றுலா மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் சுற்றுலா சபைக்கான பணிப்பாளருக்கான நியமனக் கடிதத்தை கொழும்பிலுள்ள முதலமைச்சர் காரியாலயத்தில் வைத்து நேற்று கிழக்கு மாகாண முதலமைச்சர் வழங்கி வைத்தார். நியமனம் வழங்கும் சந்தர்ப்பத்தில் சுற்றுலா சபையின் தலைவர் சந்திரா மொஹட்டி மற்றும் அவுஸ்திரேலியா முதலீட்டாளர் ஒருவரும் பங்கேற்றிருந்தனர்.






அட்டாளைச்சேனை பிரதேசத்தில் டெங்கு நுளம்பினை பூண்டோடு அழிக்கும் வேலைத்திட்டம் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபை ஆகியவற்றால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கமைவாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.அலாவுதீன், பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் ஆகியோரினால் விழிப்புணர்வு ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெறுவதையும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்படுவதையும் சுகாதாரத்துறையினர் குடியிருப்புக்களை சோதனையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

# முறையான பயிற்சிகளின் மூலம் ஓட்டிசத்தை குறைப்படுத்தலாம்



பெண் குழந்தைகளை விட மூன்று மடங்கு அதிகமாக ஆண் குழந்தைகளைத் தாக்குகிறது இந்த ஓட்டிசம். ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட அநேகமான குழந்தைகளைப் பார்த்தால் தங்களைப் பராமரிப்பவர்களை விட தங்களைச் சுற்றி இருக்கும் சடப்பொருட்கள் மீதே பாசமாக இருப்பார்கள். எந்நேரமும் ஏதாவது பொருளை எடுத்து வைத்து அதன் அளவு, வடிவம், தன்மை பற்றியே ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார்கள். தாம் நேசிக்கின்ற பொருளைக் காணா விட்டால் மூர்க்கமாகிப் பக்கத்திலிருப் பவரைத் தாக்கும் குழந்தைகளுமுண்டு. சில குழந்தைகள் கையால் தரையைப் பிறாண்டுவார்கள் தரையில் கையால் குத்துவார்கள் தலையை ஆட்டி ஆட்டி வித்தியாசமான சத்தம் போடுவார்கள். இந்த ஓட்டிசம் குழந்தைகளிடம் சில அதீத சக்தி இருக்கும். உதாரணமாக மூன்று நான்கு இலக்க எண்களைக் கூட இலகுவாகப் பெருக்கிச் சொல்வார்கள்.



ஆனால் ஓட்டிசம் என்ற ஒரு மனநிறியான பிரச்சினை இருப்பதை அமெரிக்க மருத்துவ நிபுணரான கேனர், 1943 ஆம் ஆண்டில் கண்டறிந்தார். இதன் பின்னரேயே ஓட்டிச குழந்தைகள் விசேட தேவையுடைய பிள்ளைகளின் பட்டியலில் இணைக்கப்பட்டனர்.

இலங்கையில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உள்ளனர். நாம் இவர்களை அடையாளம் காண்பதில்லை. ஏனெனில் பரிசோதனைகள் செய்து இவருக்கு ஓட்டிசம் உள்ளது என்று கண்டறிய முடியாது. பார்ப்பதற்கு இவர்களை சாதாரண பிள்ளைகள் போலவே நடந்து கொள்வார்கள். நடத்தை மற்றும் பழக்க வழக்கங்களில் காணப்படும் மாற்றங்களை வைத்தே இவர்கள் அடையாளம் காணலாம். ஒவ்வொரு 110 குழந்தைகளில் ஒருவருக்கு ஓட்டிசம் இருக்கலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை இனி பார்ப்போம். கண்களால் மற்றவர்களை நேருக்கு நேர் நோக்குவதைத் தவிர்ப்பார்கள். அதாவது அவர்களின் பார்வை வேறு ஏதையோ நோக்கி நிற்கும். அத்துடன், பெயர் சொல்லி அழைக்கும் போது அதை பொருட்படுத்தமாட்டார்கள்.

பேச ஆரம்பிப்பது தாமதமடையும். சாதாரண பிள்ளைகளைப் போன்று மூளை வளர்ச்சியடைந்திருந்தாலும், இவர்களின் கிரகிக்கும் தன்மை குறைவாக காணப்படும். அத்துடன் வார்த்தைகளை தாம நித்தே உச்சரிப்பார்கள்.

பேசுவது மற்றவர்களுடன் உறவுகளைப் பேணுவது ஆரம்பத்தில் சாதாரணமாகவே இருக்கும். 15 மாத வயதை அடையும் போது அல்லது அதற்குச் சற்றுப் பின் இத்திறன்களில் பின்னடைவு காணப்படும். ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடும் தன்மை குறைவாவே இருக்கும். சில வேளைகளில் பேசமாட்டார்கள். ஆனால் இவர்கள் ஊமை அல்ல. சில வேளை காரணமின்றி அழுவார்கள், சிரிப்பார்கள் கூடுதலாக தனிமையையே விரும்புவார்கள். இவர்களுக்கு பிடித்த விளையாட்டை மட்டும் திரும்பத்திரும்ப விளையாடுவார்கள். புதிதாக சொல்லித் தந்தால் அதில் ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

தலையை விரைவாக ஆட்டுதல், கைகளை அசைத்தல், உடலை முன்னும் பின்னுமாக அசைத்தல், துள்ளுதல் போன்ற அங்க அசைவுகள் வெளிப்படும். எப்போதும் தமது உடலை அல்லது அங்கங்களைத் தேவையில்லாமல் அசைத்துக் கொண்டே இருப்பார்கள்.

ஆரம்பத்தில் பேசத் தொடங்கும் இவர்கள் இரண்டு வயதை அடையும் போது திடீரென பேச்சு இல்லாமல் போய்விடும். முக்கியமாக இப்பிள்ளைகள் நேரம், இடம், யார் எவர் என்ற வித்தியாசம் உணரமாட்டார்கள். இங்கு நாம் குறிப்பிடும் விடயங்கள் மட்டுமன்றி இன்னும் பல வித்தியாசங்கள் இப்பிள்ளைகளில் காணப்படும்.

ஓட்டிசம் என்பது நரம்பு தொகுதியின் விருத்தியில் ஏற்படும் தாக்கத்தினால் ஏற்படும் ஒரு நிலையாகும். இதனை நரம்பு மண்டலத்தின் சிறு குறைபாடு என்று கூறலாம்.

ஓட்டிசத்தால் ஏற்படும் பாதிப்பு கர்ப்பக்கால ஆரம்பத்தில் 25 சதவீதமான மூளை வளர்ச்சியும், பிறந்தவுடன் முழு வளர்ச்சியும் காணப்படும். ஓட்டிசம் ஆரம்பக் கட்டத்திலிருந்தே மூளை விருத்தியில் சிறுபாதிப்பை ஏற்படுத்தும். இக்குறைபாடு சிறு வயது முதல் பிள்ளைகளில் காணப்படுகின்றது. இக்குறைபாடு உள்ளவர்களை விசேட தேவையுள்ளவர்கள் பட்டியலில் இடப்படுகிறது. அத்துடன் கருவில் இருக்கும் குழந்தைக்கு ஓட்சிசன் குறைபாடு உருவானாலும் ஓட்டிசம் வருவதற்கு வாய்ப்பிருக்கும் என்கிறார் வைத்தியர்.

மேலும் பார்ப்போமானால் ஓட்டிசம் உடைய பிள்ளைகளில் நாற்பது வீதமானோருக்கு வலிப்பு நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. மனநலக் குறைப்பாடு கொண்ட பிள்ளைகளுக்கு வலிப்பு ஏற்படுவது? பொதுவானது. பத்து முதல் பதினைந்து வீதமான பிள்ளைகளுக்கு பெற்றோரிலிருந்து பரம்பரை அலகுகள் மூலம் கடத்தப்படும் ஏனைய நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படும். அத்துடன் நித்திரை சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர்.




# உடற்சூட்டை தணிக்கும் சுரைக்காய்

சுரைக்காய் விற்றமின் பி, சி சத்துகளை கொண்டுள்ளது. நீர்சத்து 96.07 %, இரும்புச் சத்து 3.2%, தாது உப்பு 0.5 %, பாஸ்பரஸ் 0.2%, புரதம் 0.3%, கார்போஹைட்ரேட் 2.3% போன்ற சத்துகளை கொண்டுள்ளது சுரைக்காய்.



கோடை காலத்தில் சுரைக்காயை சாப்பிட்டு வர தாகம் ஏற்படாது. மேலும் நாவறட்சியை போக்கும். கை, கால் எரிச்சல் நீங்க சுரைக்காயின் சதைபகுதியை எரிச்சல் உள்ள இடத்தில் வைத்து கட்டினால் எரிச்சல் குறையும். உடலை குளிர்ச்சியாக வைத்து கொள்ள விரும்பினால் சுரைக்காயை பயன்படுத்தலாம்.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு அடிக்கடி தாகம் ஏற்பட்டு உடல் எடையும் குறையும். மேலும் நீரிழிவு உள்ளவர்கள் இந்த காயை அடிக்கடி பயன்படுத்தி வர இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கணிசமாக குறையும். வெப்பத்தினால் வரும் தலைவலி நீங்க சுரைக்காயின் சதைப்பகுதியை அரைத்து நெற்றியில் பற்று போட தலைவலி நீங்கும். வெப்பமண்டல நாடுகளில் உடல் சூடு இயல்பாகவே அதிகமாகக் காணப்படும். இதனால் உடலானது பலவகையான இன்னல்களைச் சந்திக்க நேரிடும். இதனால் தான் நம் முன்னோர்கள் உடல் சூட்டைத் தணிக்க சுரைக்காயை உணவில் அதிகம் சேர்த்து வந்துள்ளனர். சுரைக்காயை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து வந்தால் உடல் சூடு தணியும், வெப்ப நோய்கள் ஏதும் ஏற்படாது.

மனித உடலில் உள்ள தேவையற்ற வியர்வை, சிறுநீர் வழியாக வெளியேறும். சிறுநீரகமானது இரத்தத்தில் உள்ள இரசாயனத் தாதுக்களைப் பிரித்து வெளியேற்றுகிறது. சில சமயங்களில் இவை வெளியேறாமல் மீண்டும் இரத்தத்தால் உறிஞ்சப்பட்டு உடல் பலவகையான இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது. இந்த நிலையைப் போக்கி சிறுநீர் நன்கு வெளியேற சுரைக்காய் சிறந்த மருந்தாக விளங்குகிறது.

சுரையின் இலைகளை நீரிலிட்டு ஊற வைத்து அந்த நீரைப் பருகி வந்தால் வீக்கம், பெருவயிறு, நீர்க்கட்டு நீங்கும். காமாலை நோய்க்கும் பயன்படுத்தலாம். சுரைக்காய் மற்றும் அதன் விதைகளுக்கு ஆண்மையை பெருக்கும் சக்தி உண்டு. சுரைக்காயின் சதைப் பகுதியுடன் விதைகளையும் சேர்த்து சர்க்கரையுடன் கலந்து ஒரு மாதம் உண்டு வந்தால் பலன் கிடைக்கும்.




# விக்டோரியா ரிஜியா

உலகின் மிகப் பெரிய வட்ட வடிவ இலை 'விக்டோரியா ரிஜியா'. அல்லி வகையைச் சார்ந்த இந்த இலை 3 மீட்டர் விட்டம் வரை வளரும். சராசரியாக இலையின் குறுக்களவு 1.85 மீட்டர். இதன் அடிப்பகுதியில் வளரும் தண்டு 7 முதல் 8 மீட்டர் நீளத்தில் இருக்கும். தண்டுப் பகுதி முழுவதும் தண்ணீருக்குள்ளேயே இருக்கும்.



இதன் பிறப்பிடம் இங்கிலாந்துதான். இந்த இலையைக் கண்ட விக்டோரியா மகாராணி, இதை 'விக்டோரியா ரிஜியா" என்று அழைத்ததாகக் கூறுகிறார்கள். ஆனால், இதன் உண்மையான பெயர் அமேசானிகா. இங்கிலாந்தைத் தவிர்த்து பிரெஞ்சு கயானா, அமெரிக்காவிலும் இது அதிகம் காணப்படுகிறது. குறிப்பாக அமேசன் காட்டில் இந்த அல்லி வகை இலை அதிகம் உள்ளது.

# மனித இதயத் துடிப்பை உணரும் சுறா மீன்கள்

கடல்வாழ் உயிரினங்களில் திமிங்கலத்திற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய உயிரினமாக சுறா மீன்கள் அறியப்படுகிறது. கடலுக்குள் மனித இனத்தை அச்சுறுத்துவதில் சுறா மீன்கள் முதன்மை வகிக்கின்றன.

மனிதர்கள் மற்றும் தங்களுக்கு உணவாகும் மீன்களின் இருப்பிடங்களை எளிதில் கண்டுபிடித்து விடும் திறமையை பெற்றுள்ளதே சுறா மீன்களுக்குரிய அற்புதமான குணாதிசயம் ஆகும்.


கடலில் குறிப்பிட்ட சில எல்லையை ஒரு மனிதன் தொடும்போது சுறா மீன்கள் எங்கிருந்தாலும் அந்த மனிதனை நோக்கி சரியாக வந்துசேர்ந்து விடுகின்றன. மனிதர்கள் இருக்கும் இடத்தை சுறா மீன்கள் மட்டும் எப்படி சரியாக அறிந்து கொள்கின்றன? என்ற கேள்வி அனைவருக்கும் தோன்றலாம். உலகில் எந்த ஒரு மீன் இனத்திற்கும் இல்லாத ஒரு தனி சிறப்பு இந்த சுறா மீன்களுக்கு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது இதயத்துடிப்பை உணரும் சிறப்பு. தொலைதூரத்தில் நீந்தும் மனிதர்கள் மற்றும் மீன்களின் இதயத்துடிப்பை எளிதில் உணர்ந்து அவற்றின் இருப்பிடத்துக்கு சுறா மீன்கள் வந்து விடுகின்றன.

இதயத்துடிப்பை உணரும் தன்மை சுறா மீன்களை தவிர வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது என்று கடல்வாழ் உயிரின ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# மின் விளக்கை எரியச்செய்யும் மனித மூளை!



உலகிலேயே, ஏன் பிரபஞ்சத்தில் உள்ள உயிரினங்களிலேயே மனித மூளைதான் மிகவும் புத்திக் கூர்மை கொண்டது. மனிதர்களின் வாழ்க்கையில் 2 வயதில் தான் மூளை செல்கள் அதிகபட்சமாக இருக்கின்றன.

அதேநேரம், மனித மூளை முதிர்ச்சி அடைய 20 ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

கருவறையில் வளரும் குழந்தையின் மூளையில் ஒவ்வொரு விநாடியும் 8,000 புதிய மூளைச் செல்கள் வளர்கின்றன.

பிறந்த சில மணி நேரத்திலேயே தாயின் முகத்தைக் கண்டுணர்ந்துகொள்ளும் திறன், பிறக்கும் குழந்தைகளுக்கு உண்டு.

நமது மூளை எல்லா நேரமும் வேலை செய்து கொண்டே இருக்கிறது. ஒரு மனித மூளைக்குள் ஒரு நாளில் சராசரியாக 70,000 எண்ணங்கள் ஓடுகின்றன.

உண்மையில் தூங்கும்போதுதான் மூளை அதிகமாக வேலை செய்கிறதாம். கனவும் அதன் ஒரு பகுதிதான்.

மனித மூளையில் 60 சதவீதம் கொழுப்பு இருக்கிறது என்றாலும், அது கடுமையாக வேலை செய்கிறது. மூளை 25 வோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இதன் மூலம் ஒரு பல்பையே எரிக்க முடியும்.

மனித மூளை என்ற உறுப்புக்கு நேரடியாக வலியை அறியும் உணர்வு இல்லை. அதனால், ஒரு மனிதர் விழித்திருக்கும்போதே அவரது மூளையில் அறுவை சிகிச்சை செய்ய முடியும்.

மூளையால் 50,000 மாறுபட்ட மணங்களை நினைவு வைத்துக் கொள்ள முடியும்.

# கூகுளின் புதிய செயலி

புகைப்படங்களை எடிட் செய்ய உதவும் புதிய சமூக வலைத்தள செயலியை கூகுள் உருவாக்கி வருவதாக கூறப்படுகின்றது. இந்த செயலி சமீபத்தில் அப்பிள் அறிவித்த க்ளிப்ஸ் செயலியை போன்றே வேலை செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்பிள் சமீபத்தில் அறிவித்த க்ளிப்ஸ் செயலி மூலம் வீடியோக்களை எடிட் செய்து, வீடியோக்களில் பல்வேறு அம்சங்களை சேர்க்க முடியும்.



இதனால் வாடிக்கையாளர்கள் புகைப்படங்களை எடிட் செய்து அவற்றை குழுக்களாக பிரித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். மேலும் இந்த செயலியானது கூகுளின் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வசதிகளை கொண்டிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

கூகுளின் புதிய செயலியிலும் இதே போன்ற வசதிகள் வித்தியாச மாற்றங்களை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்பிள் க்ளிப்ஸ் செயலி ஏப்ரல் மாதம் வெளியாகலாம் என கூறப்படுகின்றது. கூகுளின் செயலியில் சமூக அம்சம் வழங்கப்பட உள்ளதாக கூறப்படுகின்றது.

கூகுளின் புதிய செயலி ஏற்கனவே அந்நிறுவனம் வெளியிட்ட அல்லோ மற்றும் டுயோ போன்ற செயலிகளின் பட்டியலில் இணைந்து கொள்ளும் என்பதோடு இவையும் நல்ல வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இன்ஸ்டாகிராமின் புதிய வசதி!

புகைப்படங்கள் மற்றும் சிறிய அளவிலான வீடியோக்கள் என்பனவற்றினை ஒன்லைனில் பகிர்ந்து மகிழும் சேவை இன்ஸ்டாகிராம் வழங்கி வருகின்றது.

பல பிரபலங்கள் உட்பட மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்தும் இச்சேவையில் குறித்த கால இடைவெளியில் புதிய அம்சங்கள் வழங்கப்பட்டும் வருகின்றன.

இவற்றின் வரிசையில் தற்போது மற்றுமொரு புதிய வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதாவது இன்ஸ்டாகிராமின் ஊடாக ஒளிபரப்பப்பட்டு வரும் நேரடி வீடியோக்களை ஸ்மார்ட் கைப்பேசிகளில் தரவிறக்கம் செய்துகொள்ளும் வசதியாகும்.

எனினும் இவ் வீடியோக்களை ஒளிபரப்பு முடிவடைந்த நிலையிலேயே தரவிறக்கம் செய்யக்கூடியதாக இருக்கும்.

இதற்காக Save எனப்படும் வசதி தரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேரடி ஒளிபரப்புக்களை கண்டுமகிழ முடியாதவர்கள் அவற்றினை சேமித்து வைத்து பின்னர் பார்த்து மகிழ முடியும்.



# நுரைச்சோலை வீடமைப்புத் திட்டம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுமா?



சுஐப் எம் காசிம்

சவூதி அரேபிய வரத் அமைப்பின் நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அக்கறைப்பற்று நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தை பயனாளிகளுக்கு கையளிப்பது தொடர்பாக அமைச்சரவை பரிசீலித்து வருகின்றது.

செவ்வாயன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு அமைச்சர் றிஷாத் பதியுதீனால் தயாரிக்கப்படட்ட அந்த அமைச்சரவைப் பத்திரத்தை அவர் நாட்டில் இல்லாததினால் பதில் அமைச்சர் அமீர் அலியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் அடங்கியுள்ள விபரங்கள் வருமாறு

2016.08.02 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதியினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிர்ணயிக்கப்பட்டதொரு காலப்பகுதிக்குள் அம்பாறை மாவட்டத்தின் மாவட்ட செயலாளரின் ஊடாக நடைமுறைப்படுத்தல்,

மேற்குறித்த வீடுகளை புனரமைப்புச் செய்வதற்கான வேலைகளை மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு தேவையான நிதியை தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் வீடுகளை மக்களிடம் ஒப்படைக்க ஆவன செய்தல்

வீடுகளை புனரமைக்கத்தேவையான செலவுகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினூடாக மேற்கொண்டு வீடுகளை மக்களிடம் ஒப்படைத்த பின்னர் அதற்கு செலவு செய்யப்பட்ட நிதியை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினூடாக ஏற்கனவே இவ் வீட்டுத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கிய நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

இதே வேளை 2016.08.02 ஜனாதிபதி தலைமையில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பங்கேற்ற உயர்மட்டக் கூட்டத்தில் 500 வீடுகளையும் விநியோகிப்பதெனவும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 303 பயனாளிகளுக்கு அவற்றை ஒதுக்குவதுடன் எஞ்சிய 197 வீடுகளை சிங்கள மற்றும் தமிழ் குடும்பங்களை உள்ளடக்கிய வகையில் பயனாளிகளைத் தெரிவு செய்வதெனவும் முடிவெடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென சவூதி அரேபிய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இந்த வீடுகள் 60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இற்றை வரை இந்த வீடுகள் கையளிக்கப்படாது இழுபறி நிலையில் இருந்ததாலேயே அமைச்சரவைக்கு இந்தப்பத்திரத்தை அமைச்சர் ரிஷாட் சமர்ப்பித்திருந்தார்.

சவூதி அமைப்பினால் கட்டிக் கொடுக்கப்பட்ட இந்த வீடுகள் 2011 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டிருந்த போதும் பயனாளிகளுக்கு வீடுகளை வழங்குவதில் தடைகள் ஏற்பட்டன.

ரஜமஹா விஹாரைக்கு அண்மித்த பகுதிகளில் பெருந்தொகையான முஸ்லிம் குடும்பங்களை குடியமர்த்துவதன் மூலம் இந்த விகாரையை அண்டி வசித்து வரும் சிங்கள பௌத்த குடும்பங்களின் பரம்பலுக்கு இது தடையாக அமைவதுடன் அவர்களது அடிப்படை உரிமையை மீறுவதாக அமையுமென வலியுறுத்தி வண, எல்லாவல மேதானந்த தேரர் மற்றும் ஏனைய 12 பேரினால் அடிப்படை உரிமை மனுவொன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதன் விளைவாக குறித்த வீடுகளை ஒதுக்கீடு செய்வது இடைநிறுத்தப்பட்டது.

உச்ச நீதிமன்றம் அவர்களது அடிப்படை உரிமை மனுவை கருத்திற் கொண்டு அரச நிலத்தை அரசாங்கம் மக்கள் நம்பிக்கைக்கு பொறுப்பாக வைத்திருப்பதுடன் அதனை சட்டத்தின் பிரகாரம் பாராதீனப்படுத்தலாம் என 2009.06.01 தீர்மானித்திருந்தது.

இந்த தீர்ப்பினைப் பின்பற்றும் வகையில் அம்பாறை மாவட்ட செயலாளர் 2009.02.18 அன்று சட்டமா அதிபரிடம் சட்ட ஆலோசன கோரியிருந்தார்.

சட்டமா அதிபர் தனது 2012.12.31 ஆம் திகதிய பதில் கடிதத்தில் அரச நிலத்தை அரசாங்கம் பாராதீனப்படுத்தலாம் என பதிலளித்துள்ளார். இதன் பிரகாரம் அரசியல் அமைப்பு யாப்பு காணி கட்டளைச்சட்டம் மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம் ஆகியவற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையிலே மாத்திரமே நிலம் பாராதீனப்படுத்த முடியும் எனக்குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் வசிக்கின்ற சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களினதும் மற்றும் இந்த மாவட்டத்திலுள்ள அரச நிறுவனத்தலைவர்களினதும் பங்குபற்றலுடன் 2016.01.11 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மேற்குறித்த வீடமைப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் அங்கு வசிக்கின்ற மூவின மக்கள் மத்தியிலும் விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் பல வருடங்களாக இந்த வீடுகள் கையளிக்கப்படாது மூடப்பட்டுக் கிடந்ததால் இந்த வீடுகள் உருக்குலைந்து காணப்படுகின்றன.



அமைச்சர் சவூதி அரேபியாவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்த சவூதி அரேபிய வராத் நிறுவனத்துடன் பேச்சு நடாத்தியதை அடுத்து, குறித்த வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தால் புனரமைத்து நவீன வீடுகளாக மாற்றித் தருவதாக உறுதியளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதன் பிறகே அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 2017/08 என்ற இது தொடர்பான பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

---







# ஜே.வி.பி. கிளர்ச்சியின் பசுமையான நினைவுகள்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனைத் தொகுதி அமைப்பாளர்

1971 இல் இலங்கையில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் முதலாவது கிளர்ச்சிக்கு நேற்றுடன் 46 வருடங்களாகின்றன.

இக்கிளர்ச்சி வெல்லவாய பொலிஸ் நிலையத் தாக்குதலுடன் ஆரம்பமானது. இத்தாக்குதலுக்காக கல்முனை முஸ்லிம் வர்த்தகர் ஒருவரது லொறியே பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பான விடயங்களை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும் கைத்தொழில், வர்த்தக அமைச்சரின் பாராளுமன்ற விவகாரச் செயலாளரும் பிரபல அறிவிப்பாளருமான ஏ. ஆர். எம். ஜிப்ரி இங்கே விளக்குகிறார்.

அன்று 1971 மே மாதம் 05ஆம் திகதி திங்கட் கிழமை. அதற்கு முதல் நாள் இரவில் தொம்பகஹ வெல வாராந்தச் சந்தையில் வாழைக்குலைகள் மற்றும் காய்கறி வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக எனது தகப்பனார் கல்முனை மாக்கார் முதலாளியின் லொறியை வாடகைக்கு எடுத்துச் சென்றார். இதேபோல் மாக்காரின் மைத்துனரான சீனி முஹம்மது என்பவரின் லொறியை எனது சிறிய தந்தையாகிய மருதமுனையைச் சேர்ந்த மஜீது என்பவரும் எடுத்துச் சென்றிருந்தார். இந்த வாராந்த சந்தை அதிகாலை 4.30 மணியளவில் இருந்தே இயங்க ஆரம்பிக்கும். அதுவரை கல்முனையிலிருந்து செல்லும் வியாபாரிகள் யாவரும் லொறிகளுக்குள்ளேயே உறங்கிக் கொள்வார்கள். அதிகாலை எழுந்து தமது கடமைகளை முடித்து பொருட்களைக் கொள்வனவு செய்தபின் மாலை 4.00 மணியளவில் கல்முனைக்குக் கொண்டு வந்து விடுவார்கள்.

குறித்த தினத்தில் அதிகாலை 4.00 மணியளவில் லொறிகளை நிறுத்தி வைத்திருந்த தொம்பகஹவெல சந்தைக்கு அருகில் இராணுவ சீருடையணிந்த சுமார் இருபது பேரளவில் வந்து எனது தகப்பனார் வாடகைக்கு அமர்த்திச் சென்ற லொறியை தட்டி எல்லோரையும் இறக்கிவிடும்படி உத்தரவிட்டுள்ளனர். உடனே எனது தகப்பனார் எழுந்து சென்றதும் அக்குழுவுக்கு தலைமை தாங்கி வந்த இளைஞரை அடையாளம் கண்டு கொண்டார். அவரும் தகப்பனாரிடம் மௌகுத் நெஹ முதலாளி (ஒன்றுமில்லை முதலாளி) என்று கூறிவிட்டு அதற்கு முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சீனி முஹம்மது என்பவரின் லொறியைத் தட்டி அதன் சாரதியை உலுக்கி அதட்டி லொறிச் சாவியைக் கைப்பற்றி உள்ளிருந்தவர்களை இறக்கிவிட்டு அவர்களே லொறியை எடுத்துக் கொண்டு மொனராகலைப் பக்கமாகச் சென்றனர்.

இதற்குள் எனது தகப்பனாருக்குத் தெரிந்த குழுத் தலைவன் இராணுவத்தில் பணிபுரிந்தவர் அல்ல. ஏதாவது கொள்ளைக்காகத்தான் இந்த லொறியை எடுத்துச் செல்கிறான் என்ற சந்தேகத்துடன் தான் அழைத்துச் சென்ற லொறிச் சாரதியான திரவியம் என்பவரை எழுப்பி விடயத்தைத் தெரிவித்தார். மிகவும் தைரியசாலியான திரவியம் ஓரிருவரை துணைக்கு அழைத்துக் கொண்டு கடத்தல்காரர்களை பின் தொடர்ந்து வேகமாகச் சென்றுள்ளார். மொனராகலைக்கு அருகில் அவர்களை நெருங்கும் போது கடத்தல்காரர்கள் துப்பாக்கி வேட்டுக்களை வானை நோக்கி சுட்டு பயமுறுத்தியதும் தொடர்ந்து செல்வது நிறுத்தப்பட்டு திரவியம் என்பவர் மொனராகலை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று விடயத்தைத் தெரிவித்துவிட்டு மீண்டும் தொம்பகஹவெல சந்தைக்கு வந்து விட்டார். இந்த வாராந்த சந்தையில் இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் இலங்கை வானொலியில் விசேட செய்தி ஒலிபரப்பாகியது. இதில் சேகுவேரா என்ற இயக்கத்தினர் லொறியொன்றில் வந்து வெல்லவாய பொலிஸ் நிலையத்தைக் கைப்பற்றி தமது இயக்கக் கொடியை நாட்டியுள்ளார்கள். இந்நிலையைத்தை மீட்பதற்காக மொனராகலை பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர். என்ற செய்தி ஒலிபரப்பாகி சுமார் இரண்டு மணி நேரத்தில் வெல்லவாய பொலிஸ் நிலையத்தை பொலிஸார் மீட்டுள்ளதாகவும் அவர்கள் கடத்திச் சென்ற கல்முனை லொறி காட்டுப்பகுதியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் புதிய செய்தி ஒலிபரப்பாகியது. அத்துடன் எந்தவிதமான உயிர்ச்சேதங்களும் இடம்பெறவில்லை எனவும் அன்று மாலை நாடு முழுவதிலும் ஊடரங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என்றும் வானொலிச் செய்தி அடிக்கடி ஒலிபரப்பாகியது.

இதேபோல் இலங்கை வானொலி பிரதான செய்திகளில் சேகுவேரா இயக்கம் பற்றியும் அதன் தலைவர் ரோஹன விஜேவீர என்பது பற்றியும் இவர்கள் அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததாகவும் சொல்லப்பட்டது. அவர்களது திட்டம் 1971 மே மாதம் 05ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை சிறைபிடித்து நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களை தமது கட்டுப்பாட்டுக்கள் எடுத்து முக்கிய ஊடக நிறுவனங்களையும் கைப்பற்றி படை வீரர்களைச் சரணடையச் செய்து இலங்கையில் பொது உடைமைக் கொள்கையான 'மாக்ஸிஸ' ஆட்சியை நிலை நிறுத்துவற்காகவே ஆகும். ஆனால் மொனராகலை மாவட்டத்திலுள்ள தொம்பகஹவெலவில் மாலை நேரம் என்பதை காலை 5.00 மணியென தவறாக நினைத்து இவ்வாறு செயற்பட்டதன் விளைவாக ரோஹன விஜேவீரவின் திட்டம் தவிடுபொடியாகியது.

மாலை 3.00 மணியவில் அதிகமானவர்கள் கல்முனை மார்க்கெட்டில் லொறிகளின் வருகைக்காக காத்திருந்தனர். எனது தகப்பனார் எடுத்துச் சென்ற லொறி மட்டுமே குறைந்தளவு பொருட்களுடன் வந்து சேர்ந்தது.

பொருட்கள் அவசர அவசரமாக இறக்கப்பட்டன. இதற்குள் அங்கு நடந்த விடயங்களை எனது தகப்பனார் கூடியிருந்தவர்களுக்கு சொல்லி முடித்தார். மாலை ஊடரங்குச் சட்டம் அமுலாவதற்குள் எல்லோரும் அவரவர் வீடுகளுக்குள் முடங்கிக் கொண்டனர்.



# றிஷாதை சீண்டிப்பார்க்க நினைப்பது நல்லாட்சியின் மடத்தனமான செயல்

## மக்கள் காங்கிரஸ் பிரதித்தலைவர் ஏ.எம். ஜெமீல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அமைச்சர் ரிஷாத் பதியுதீனை எதிர்க் கட்சி வரிசையில் அமர்த்திப் பார்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால ஆசைப்பட்டால் ஜனாதிபதியும் அதே வரிசையில் அமர நேரிடும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதி தலைவரும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனை சீண்டிப் பார்க்க நினைப்பது இந்த நல்லாட்சி அரசின் மடத்தனமான செயல் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். முசலி விவகாரத்தினால் எழுந்துள்ள முரண்பாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவப் படுத்திய கட்சிகள் பல, மைத்திரியை ஆதரிக்க பின்வாங்கி இருந்த காலகட்டத்தில் எமது கட்சின் தலைவரான அமைச்சர் ரிஷாத் மாத்திரம், பல்வேறு வகையான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தனது ஆதரவினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கியிருந்தார்.

இவரது துணிச்சலான தொடக்கமே ஏனைய கட்சிகளையும் மைத்திரியை ஆதரிக்க இழுத்து வந்தது என்பதை எவரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்குமிடையில் மிக நெருக்கமான நட்பு இருந்தது. அதனால் மஹிந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சர் ரிசாட், தனது சமூகத்திற்காக தான் நினைத்த விடயங்களை சாதிக்க முடிந்தது. குறிப்பாக வடக்கு முஸ்லிம்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்தார். பிற்காலத்தில் முஸ்லிம்கள் மீதான சிங்கள இனவாதிகளின் மோசமான செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் தொடர்ச்சியாக கோரி வந்த போதிலும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த அசட்டையாக இருந்ததன் காரணமாகவே ஒரு பலம்வாய்ந்த ஆட்சியாளனை விட்டு அமைச்சர் ரிஷாத் பிரிந்தார்.

முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பையும் மத, கலாசார உரிமைகளையும் உத்தரவாதப்படுத்த தவறிய ஆட்சியாளருடன் பங்காளியாக இருப்பது சமூகத்திற்கு இழைக்கும் பெரும் துரோகம் என்ற காரணத்தை முன்னிறுத்தியே அவர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறினார். அதுவே மஹிந்தவின் ஆட்சிக்கு சாவுமணியாகவும் அமைந்தது. இதன் மூலம் அமைச்சர் றிஷாத்தின் தூய எண்ணத்தை வல்ல இறைவன் பொருந்திக் கொண்டான்.

இப்படியொரு சூழல் காரணமாக மைத்திரியை ஆட்சியில் அமர்த்துவதற்கு நல்லாட்சியை உருவாக்குவதற்கும் முக்கிய காரணகர்த்தாவாக இருந்த அமைச்சர் ரிசாட் பதியுதீனை சீண்டிப்பார்க்க நினைப்பது இந்த நல்லாட்சி அரசின் மடத்தனமான செயல் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாரிய அதிகாரங்களோடும் பலத்தோடும் இருந்த முன்னாள் ஆட்சியாளர்களிடம் எத்தனையோ கொலை அச்சுறுத்தல் வந்தும் அதனை பொருட்படுத்தாது, சமூக சிந்தனையுடன் செயற்பட்ட இந்த ரிசாட் பதியுதீன், அமைச்சர் பதவியை களைவதற்கு தயங்குவாரா? அவ்வாறு எவரும் கனவு காணாதீர்கள். நிச்சயமாக அவர் எந்த சக்திக்கும் அடிமைப்பட்ட ஒரு தலைவரல்ல.

இந்த நல்லாட்சி அரசின் வெற்றி என்பது சிறுபான்மை சமூகம் பெற்றுக்கொடுத்த வெற்றி என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் மறந்து செயற்பட்டால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பெற்ற அனுபவங்களை கற்றுக்கொள்ள நேரிடும் என்பதை இத்தருணத்தில் எச்சரிக்கையாக சொல்லி வைக்க விரும்புகின்றேன்- என்றார்.

# சீனன் கோட்டையில் கிரிக்கெட்போட்டி

(பேருவளை முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை டைம்ஸ் கிரிக்கெட் கழகம் முதல் தடவையாக நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் நடைபெறும்.

அணிக்கு 11 பேர் கொண்ட 5 ஓவர் மட்டுப்படுத்தப்பட்டுள்ள இச்சுற்றுப் போட்டியில் 11 அணிகள் பங்குபற்றவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுத்தலைவர் பஹ்ரி பாயிஸ் தெரிவித்தார்.

போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு கேடயத்துடன் பரிசில்களும் வழங்கப் படும். பரிசளிப்பு விழாவில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரியும் பீபா கவுன்சிலின் கமிசருமான ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாக கலந்துகொள்வர். இலங்கை கிரிக்கெட் அணியின் முக்கிய வீரர்கள் பிரமுகர்கள் பலரும் கௌரவ அதிதிகளாக பங்குபற்றவுள்ளனர்.



மறைந்த ரவி ஜயவர்த்தனவின் பூதவுடலுக்கு பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய இறுதி அஞ்சலி செலுத்துவதைப்படத்தில் காணலாம். ரவி ஜயவர்த்தன மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் புதல்வராவார்.

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

# மக்களுக்கு நன்மையளிக்கும் வகையிலேயே உதவித்திட்டங்கள் அமைய வேண்டும்

## பொறியியலாளர் ஷிப்லி பாறுக்

(காத்தான்குடி டீன் பைரூஸ்)



உதவி திட்டங்கள் என்பது பாகுபாடின்றி மக்களுக்கு நன்மையளிக்கும் வகையிலேயே அமைய வேண்டும் என பொறியியலாளர் ஷிப்லி பாறுக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக்கின் 2016 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வறிய குடும்பத்தை சார்ந்த நபர்களுக்கு அவர்களின் சுய தொழிலினை மேம்படுத்தும் முகமாக துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கூறுகையிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

குறிப்பாக எங்களுடைய கடந்தகால 2015 ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து 25 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகமான நிதிகளை இத்தகைய வாழ்வாதாரம் சார்ந்த விடயங்களுக்காக ஒதுக்கியிருந்ததோடு அவ்வாறு எங்களால் வழங்கப்படும் அனைத்துவிதமான உதவிகளிலும் எத்தகைய இன, மத ரீதியிலான எதுவிதமான பாகுபாடுகளுமின்றி முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகத்தில் உள்ளவர்களை உள்ளடக்கியதாக எமது உதவித்திட்டங்களை முன்னெடுத்திருந்தோம் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக் தெரிவித்தார். எனவே இத்தகைய உதவித்திட்டங்களை பெற்றுக்கொண்டுள்ள பயனாளிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள இச்சிறிய உதவிகளை சிறந்த விதத்தில் பயன்படுத்தி தமது சுய தொழிலினை மேம்படுத்திக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வினில் 6சமூக சேவையாளர்களான எஸ்.எச்.எம். முக்தார், ஏ.எல். நௌபர், ஏ.சீஎம்.ஹில்மிஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

# நூல் வெளியீடு

(நிந்தவூர் சுலைமான் றாபி)

கவிஞர் நிந்தவூர் உமர் அலி எழுதிய 'வாப்பாடம்மா காவிய நூல் இம்மாதம் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் தலைவர் டாக்டர் ஏ.எம். ஜாபிர் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நூல் வெளியீட்டில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் விஷேட அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதோடு இந்த நிகழ்வுகள் யாவும் இஸ்லாமிய தமிழ் இலக்கிய காவலன் எஸ்.ஏ.ஆர்.எம். செய்யது ஹசன் மௌலானா முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

# சுத்தமான குடிநீர் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல்



(பிறவ்ஸ்)

சுத்தமான குடிநீர் வழங்குவதில் காணப் படும் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் அதன் பிரதித் தலைவர் ஷபிக் ரஜாப்தீன் தலைமையில் நடைபெற்றது.

கேகாலை மாவட்டத்தில் ரொக்ஹில், நாங்கல்ல மற்றும் கம்பஹா மாவட்டத்தில் மீரிகம, கல்எலிய போன்ற இடங்களில் போதியளவு குடிநீர் கிடைக்காமை, சேறுகலந்த நீர் போன்ற காரணங்களால் மக்கள் அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இவ்விடயங்கள் அமைச்சரின் கவனத்துக்கு எடுத்துச்சென்று விரைவில் அதற்கான தீர்வுகளை பெற்றுத்தருவதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதித் தலைவர் ஷபீக் ரஜாப்தீன் தெரிவித்தார். இச்சந்திப்பில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயலாற்றுப் பணிப்பாளர் மஹிலால் டி.சில்வா, சம்பந்தப்பட்ட ஊர்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# புதுவருட கொண்டாட்டத்தில் சைக்கிள் ஓட்டப்போட்டி நிகழ்வுகள்

(மல்வானை ஹனபி)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தனவின் ஏற்பாட்டில் இரண்டாவது தடவையாகவும் தெல்கொடை மஹஜன விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள "விஜய உதான" சிசிங்கள தமிழ் புத்ததாண்டுதமிழ் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஆண் மற்றும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (9) நாள் முழுவதும் நடைபெறவுள்ளது.

இப்புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஆண் மற்றும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி காலை 8.30 மணிக்கு தெல்கொடை மஹஜன விளையாட்டரங்கின் அருகாமையில் ஆரம்பமாகவுள்ளது.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு டஸ்மா நிறுவனத்தின் உரிமையாளர் நிமல் சுபஸிங்ஹவும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு மேல் மாகாண சபை உறுப்பினர் பிரசன்ன சம்பத்தும் அனுசரணை வழங்குகின்றனர்.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் 1ஆம்,2ஆம் மற்றும் 3ஆம் இடங்களை பெறும் சைக்கிள் வீரர்களுக்கு முறையே ஒரு இலட்சம்,எழுபத்தையாயிரம் மற்றும் ஐம்பதாயிரம் ரூபா ரொக்கப் பணப்பரிசில்களும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பெறும் சைக்கிள் வீராங்கனைகளுக்கு முறையே எழுபத்தையாயிரம், ஐம்பதாயிரம் மற்றும் இருபத்தையாயிரம் ரூபா ரொக்கப்பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இவ் ஊடகவியலாளர் மகா நாட்டில் மேல் மாகாண சபை உறுப்பினர் பிரஸன்ன சம்பத், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் செல்டன் செபஸ்டியன், ஊடக செயலாளர் ஹெரல்ட் சேனா தீர, ஐக்கிய தேசியக்கட்சி பியகம முகாமையாளர் இன்திரஜித் ஜயசிங்ஹ,கம்பஹா மாவட்ட சைக்கிள் சம்மேளனத்தின் தலைவர் சுமித் பாலசூரிய மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டி நடுவர் எச்.எச் ஹெண்டசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இலவச கண் சத்திரசிகிச்சை

(வெலிகம நிருபர்)

இலங்கை ஜம்இய்யதுஷ் ஷபாப் வருடாந்தம் நடாத்தி வரும், கண்களில் வெள்ளை படர்தல் இலவச கண் சத்திரசிகிச்சை முகாம், இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் 5.00 மணி வரை வெலிகம அல்-இஹ்ஸான் ஜும்ஆப் பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# அரசசேவை ஓய்வூதியர்களின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(கிண்ணியா நிருபர் )

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவு அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியிலயத்தில் நடைபெற்றது. இதில் பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.ஏ.ஹாதி,உப தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் பீ.சுப்ரமணியம்,செயலாளர்- ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எஸ்.எம்.ஜுனைதீன்,உப செயலாளர் -ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஏ.தாலுஹான், பொருளாளர்-ஓய்வு பெற்ற கிராம அதிகாரி எம்.எஸ்.எம்.இஸ்மாயில்,கணக்கு பரிசோதகர் - எம்.ரீ.எம். கபூர், உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் கே.எம்.மஹரூப்,ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எஸ்.ஏ.வதூத் ஆகியோரே புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

# உக்குவளை அஜ்மீரில் நான்கு மாணவர்கள் 9ஏ

(உக்குவளை நிருபர் ஜலீல்)

வெளியாகிய க.பொ.சாதாரண தரப்பரீட்சையில் உக்குவளை அஜ்மீர் தேசிய கல்லூரியில் 4 மாணவர்கள் 9 ஏ பெற்று சித்தியடைந்துள்ளனர். ஏ.எப்.அஸ்பா 9ஏ,எஸ்.எப்.பர்வீன்9ஏ,ஜீ.ஹிந்துஜா 9ஏ. ஆகியோராவார்.

மேலும் எ.எ.அஸ்பா 7ஏ.2பி,ஆர்.எப்.சைலா ஏ.2பி,பி.எஸ்.சைனப் 7ஏ.1பி.1சி,எஸ்.எப்.சஹ்ரா 5ஏ.3பி.1சி, ஏ.எம்.அமரா 5ஏ. 3பி.1சி, ஆர். முஸ்னி அஹமட் 5ஏ.1பி.3சி,ஆர்.ரஸ்மா சரீன் 5ஏ.4பி, கே.ஏ. ஹக் 5ஏ.1பி.1சி. ஆகிய மாணவர்களும் சித்தி பெற்று உயர் தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர்.




அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வட்டாரக் கிளைகளை கல்முனைக்குடியில் ஸ்தாபிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் கல்முனை ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது. கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும் கைத்தொழில் வர்த்தக அமைச்சரின் பாராளுமன்ற விவகாரச் செயலாளருமான ஏ.ஆர். எம். ஜிப்ரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கல்முனைக் குடியில் 16 கிளைகளை அமைப்பதற்குரிய குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன. இவ்வேளையில் 250 பேர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் புதிதாக அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டனர். இவ்வைபவத்தில் கட்சியின் தவிசாளரும் கிராமியப் பொருளாதார பிரதி அமைச்சருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலி, கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். சுபைதீன், கல்முனை மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்களான ஏ.சீ.எம். முபீத், பெஸ்டர் றியாஸ் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# விடிவுக்காய் ஏங்கும் மலையகம்





கே. சுபானி

உலகப் பொருளாதார வளர்ச்சி அசுர வேகத்தில் சென்றுகொண்டிருக்கின்றது என ஓர் ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. அந்தவகையில் அண்மைய ஆய்வறிக்கைகளின் படி இலங்கை மனித விருத்தியில் தெற்காசியாவில் முதலிடத்தை பெற்றுக் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி பொருளாதார உற்பத்தியில் 142ஆவது இடத்தையும், மனித விருத்தி சுட்டெண்ணில் 73ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப இலங்கை அண்மைக் காலமாக கண்டுவரும் வளர்ச்சிகள் உற்சாகமளிப்பதாக அமைந்திருக்கிறது. மேலும், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பாகங்களில் வறுமை நிலையானது 2002ஆம் ஆண்டிருந்த 22.2 சதவீதத்திலிருந்து 2012 - 2013 காலப்பகுதியில் 6.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. வறுமை நிலையைக்குறைப்பதில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றங்கள் உற்சாகம் தருவதாக அமைந்துள்ளன. எனினும் ஒட்டுமொத்த ரீதியாக நோக்குமிடத்து வாழ்க்கைத்தரமானது இன்னமும் கீழ்மட்டத்திலேயே காணப்படுகின்றமை வருத்தமடையச் செய்கின்றது.

இதுகுறித்து உலகவங்கியின் சிரேஷ்ட பொருளாதார நிபுணரும் இலங்கையின் வறுமை மற்றும் நலன்புரி தொடர்பான அறிக்கையை எழுதியவர்களில் ஒருவருமான டேவிட் நியூஹவுஸ் தெரிவிக்கையில், 2002ஆம் ஆண்டில் காணப்பட்ட 22.7 சதவீதம் என்ற நிலையில் இருந்த 2012 -13ஆம் ஆண்டில் 6.1 வீதமாகக் குறைவடைந்தது. ஒட்டுமொத்தரீதியில் வறுமைக் குறைப்பு தொடர்பான இலங்கையின் பெறுபேறுகள் உற்சாகமளிக்கின்றன.

இருந்தபோதிலும் வாழ்க்கைத்தரம் தொடர்ந்தும் கீழ் நிலையில் இருப்பதுடன் சில பகுதிகளில் கடும் வறுமை இன்னமும் தலைவிரித்தாடுகிறது. வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள முக்கியமான மாவட்டங்களில் அதிகப்படியான வறுமைநிலை காணப்படுகின்றதாக அடையாளங் காணப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் அதிகபட்சமாக 28.8 சதவீதமாக காணப்படும் வறுமை நிலை மன்னாரில் 20.1 சதவீதமாகவும் மட்டக்களப்பில் 19.4 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பகுதியில் வறுமை நிலையானது 45 சதவீதமாக உயர்மட்டத்தில் காணப்படுவதுடன் கோரளைப் பற்று தெற்கில் 38 சதவீதமாக காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கிற்கு வெளியே 20.8 சதவீத வறுமை நிலையை ஊவா மாகாணத்திலுள்ள மொனராகலை மாவட்டம் கொண்டுள்ளதான தரவுகள் கரிசனைக்குரியதாக அமைந்துள்ளன.

இந்த தரவுகளை உன்னிப்பாக அவதானிக்கின்றபோது இளம் சந்ததியினர் மற்றும் சிறுபான்மையினராகிய நலிவடைந்த சமூகத்தினர் மத்தியில் வறுமை நிலையானது மிகவும் அதிகரித்த ரீதியில் காணப்படுகின்றது. அத்தோடு இளைஞர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் தொழிலின்மையானது உயர்ந்தளவில் காணப்படுகின்றது.




இந்த அறிக்கையானது தோட்டத் தொழிற்றுறையினர் மத்தியில் காணப்படுகின்ற முரண்நிலையை அடையாளப்படுத்தி நிற்கின்றது. இதன்படி தோட்டத்துறையினர் மத்தியில் பண வறுமை நிலையானது குறைந்த மட்டங்களில் காணப்படும் போதும் மாற்றீடான நலன்புரி அடையாளக்குறியீடுகள் மிகவும் பாரதூரமான வகையில் பிரதிகூலங்களாக அமைந்துள்ளன. இதில் கல்வி, சுகாதாரம் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதிலும் தரமான உணவு கிடைக்காமை, குடியிருப்புக்களின் நிலைமை மோசமாக காணப்படுதல் போன்ற விடயங்கள் இதில் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய பண வறுமைக்கு அப்பாற்பட்ட சுட்டிகள் ஆய்வாளர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் முக்கியமான அறிவார்ந்த விடயங்களை வழங்கிநிற்கின்றன. முற்றுமுழுதாக பண வறுமையை ஒழிப்பதற்கு எடுக்கும் காலப்பகுதியை விடவும் பணத்தைச் சாராத வறுமை நிலையை இல்லாதொழிப்பதற்கு நீண்ட காலப்பகுதி எடுக்கும் என பொருளாதார நிபுணர் நியுஹவுஸ் சுட்டிக்காட்டுகின்றார்.



அந்தவகையில் இன்றைய மலையக சமூகத்தை எடுத்து நோக்குகையில் ஓர் ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்கு பதாதைகளை கையிலேந்தி வீதிகளில் போராட்டம் நடத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். போராட்டத்தில் இறங்கினால் தான் விடிவு கிடைக்கும் என்ற நோக்கத்தில் வீதிகளில் இறங்கியவர்களுக்கு இன்று ஏமாற்றங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காய் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தங்கள் அண்மைக் காலமாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றமை அம்மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளது.

சொச்ச ரூபா சம்பள உயர்வுக்காய் நடத்தப்படும் கூட்டு ஒப்பந்தம் என்னும் இந்த போலி நாடகம் அரங்கேற்றப்பட்டு 2015 மார்ச் 31ஆம் திகதியுடன் 17 வருடங்கள் கடந்துவிட்டுள்ளன.

1998 ஆம் ஆண்டு ஆண்டு இதன் அத்திபாரம் இடப்பட்டு, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், தொழிலாளர் நலன்சார் விடயங்கள் என இருபிரிவுகளாக மேற்கொள்ளப்பட்டன.

இந்த கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது வெறும் 98 ரூபாவாகவே காணப்பட்ட ஒரு தோட்ட தொழிலாளியின் அடிப்படை சம்பளம் இன்று 450ரூபாவாக காணப்படுகின்றது. ஆக, இந்த 17 வருட முடிவில் ஒரு தோட்ட தொழிலாளி ஒருவரின் சம்பளம் 352 ரூபாவே அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிலும் வருடமொன்று 22 ரூபாவே அதிகரிக்கப்பட்டுள்ளது.

என்ன கொடுமை... இந்த 17 வருடங்களில் 8 தடவைகள் கூட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் இன்னமும் மலையக தோட்டத் தொழிலாளி ஒருவரின் சம்பளத்தை 1000 ரூபாவால் கூட அதிகரிக்க முடியாதுபோயுள்ளதே...

நாட்டின் பொருளாதார கட்டமைப்பு நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், அரை வயிறு கஞ்சிக்கே அல்லலுறும் அவர்கள், வெறும் 450 ரூபாவால் எதனை சாதிக்க முடியும்?

இந்நிலையில் கடந்த 2016 மார்ச் மாதம் ஆரம்பமான கூட்டு ஒப்பந்த பேச்சுகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டபோதும் அவை அனைத்தும் இணக்கப்பாடின்றி முடிவடையவே, இறுதியாக செய்து கொள்ளப்பட்ட இரு தரப்பு கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் அடிப்படை சம்பளமாக 550 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தித்திறன் கொடுப்பனவு 140ரூபா மற்றும் ஏனைய கொடுப்பனவு அடங்கலாக நாட்கூலியாக 730 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உற்பத்தித்திறன் கொடுப்பனவு தொடர்பாக தோட்ட நிர்வாகங்களும் தொழிற்சங்களும் முரண்பாடான போக்கை கடைப்பிடிப்பதால் கடந்த ஐந்து மாத காலமாக தொழிலாளர்கள் முழுமையான கூலியை பெற முடியாத நிலை தொடருகின்றது.

நாளொன்றுக்கு 18 கிலோ தேயிலை பறித்தால் தான் அக்கொடுப்பனவு வழங்க முடியும் என தோட்ட நிர்வாகங்கள் கூறுகின்றன. ஆனால், கூட்டு ஒப்பந்ததில் 18 கிலோ பறிக்க வேண்டும் என எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நாட் கடத்தல்களுடன் தொடரும் கூட்டு ஒப்பந்தம் குறித்த பேச்சுக்களால் அம்மக்களின் அன்றாட கனவுகள் தொலைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சுட்டெரிக்கும் வெயில், கொட்டும் மழை, இடி- மின்னல், உறைய வைக்கும் பனி என இயற்கை அன்னையின் செல்லத் தீண்டல்களுடன் காலை ஏழரை மணி முதல் ஆரம்பிக்கும் இவர்களின் பணிக்காலம், குளவிக்கொட்டு, பாம்புக்கடி, அட்டைக்கடி என இன்னோரன்ன காட்டு ஜீவராசிகளின் தீண்டல்களுடன் ஐந்துமணிவரை தொடர்கின்றது.

இதற்கிடையே அவர்களின் பச்சிளம் குழந்தைகளோ யாரென்றே அறியாத பிள்ளை பராமரிப்பு நிலைய பராமரிப்பாளரிடம். தாயிருந்தும் அவரின் அரவணைப்பின்றி தனித்துவிடப்பட்ட சோகத்தில் காலை ஏழரை மணிமுதல் ஐந்துமணிவரை கண்களில் நீர் வழிய அன்னையின் வருகைக்காக காத்திருக்கும் சோகத்தை வார்த்தைகளால் வர்ணித்துவிடமுடியாது...

இதில் அண்மையில் வெளிவந்த அதிர்ச்சியூட்டும் செய்தி என்னவென்றால் பதுளை எல்டொப் பிரதேசத்தில் உரம் களஞ்சியப்படுத்தும் அறைக்குள் ஒரு பிள்ளை பராமரிப்பு நிலையம் இயங்கிவந்துள்ளமை கண்டறியப்பட்டது.

தேயிலைச் செடிகளுக்கு இடப்படும் பசளையின் இரசாயன தன்மை, இதன் வீரியம் அறியாது அவ்விடத்தில் அந்த பிள்ளைகள் பராமரிப்பு நிலையம் இயங்கி வந்துள்ளது.

அம்மா, அப்பா என்ற வார்த்தைகளைத் தவிர்ந்த வேறுவார்த்தைகளை உச்சரிக்க தெரியாத அந்த பாலகர்கள் தங்களுக்கு ஏற்படும் உடல் உபாதைகளை எவ்வாறு மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார்கள்?

இன்று எம் செவிக்கு எட்டிய இவ்விடயம் போன்று எத்தனை கொடிய விடயங்கள் மறைந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடியவில்லை.

மலைமுகட்டில் அமைந்திருக்கும் இவர்களின் வாழிடங்கள் பற்றி கூறத் தேவையில்லை. அதற்கு தக்க பாடம் புகட்டிவிட்டுச் சென்றுள்ளது மீரியபெத்தை பேரவலம், இந்த பேரவலம் புகட்டிய பாடமே இவ்வளவு காலமாக வாய்மூடி பேசாமடந்தைகளாக இருந்த மலையக மக்களை இன்று தமக்கு எதிரான அநீதிக்கெதிராக போர்க் கொடி தூக்க வழியமைத்துள்ளது.

நாம் அன்றாடம் காலை உடலுக்கும், அந்நாளுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்தும் விதத்தில் ரசித்து ருசித்து அருந்தும் ஒரு கோப்பை தேநீருக்குள் எத்தனை தோட்டத் தொழிலாளிகளின் கண்ணீர் இருக்கின்றதோ என எண்ணத் தோன்றுகின்றதல்லவா? இதுகுறித்து பதுளை - நமுனுகுல தோட்ட நிர்வாகத்துக்குட்பட்ட வெவேகலை பகுதியைச் சேர்ந்த கணபதி என்ற தோட்ட தொழிலாளி கூறுகையில்,

''இன்றைய நிலையில் தோட்ட நிர்வாகத்தால் கிழமைக்கு மூன்று அல்லது நான்கு நாட்களே வேலை தரப்படுகின்றது. இதில் மாதச் சம்பளத்தை பார்த்தால் மொத்தமாக 10ஆயிரமோ அல்லது 12 ஆயிரமோ கிடைக்கின்றது. அதிலும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு, சங்க சந்தா, மாத முற்கொடுப்பனவு, பிள்ளை பராமரிப்பு, கோவில் போன்றவற்றிக்காக கழிக்கப்பட்டு மிஞ்சிய சம்பளமே எமக்கு கிடைக்கப்பெறுகிறது. இதை வைத்து நாம் என்ன செய்வது. நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்வதை பார்க்கின்றபோது, இன்று நாங்கள் எடுக்கும் மாதச் சம்பளத்தால் எமது வாழ்க்கை ஓட்ட முடியாதுள்ளது. எமது தோட்டத்தை பொறுத்த மட்டில் பெரும்பாலானோர் தோட்ட வேலையை இடைநிறுத்திவிட்டு கொழும்பு போன்ற தலைநகர பகுதிக்கு சென்றுவிட்டுள்ளனர்'' - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் நாளுக்கு நாள் மாறிவரும் பொருளாதார மாற்றத்திற்கேற்ப மலையக மக்களின் வாழ்க்கைத் தரம் இதுவரை காலம் உயர்த்தப்படாமலிருப்பது அதுவும் இரண்டு வருடத்து ஒரு முறை சம்பள அதிகரிப்பு என்பது பொருத்தமற்ற அதேவேளை ஏற்றுக்கொள்ள முடியாததொன்றே...

அரசால் முன்மொழியப்பட்ட இடைகால வரவு - செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10ஆயிரம் ரூபாவினாலும், தனியார் துறையினரின் சம்பளம் 2 ஆயிரத்து 500 ரூபாவினாலும் உயர்த்துவதற்கு அரசு உறுதியளித்திருந்தது.

எனினும், நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்புச் செய்கின்ற தோட்ட தொழிலாளர் நலன் சார் விடயங்கள் அதில் உள்வாங்கப்படவில்லை.

இந்த நாட்டின் வாக்களிக்கும் உரிமையுள்ள இவர்களுக்கு தம் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கான ஒருவழியில்லாமல் போனமை சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமே...

இனிவரும் காலங்களிலாவது தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பள உயர்வு என்பது மேற்படி கூட்டு ஒப்பந்தங்களில் அல்லாது நாட்டின் வரவு - செலவுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டு அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் இது சாலச்சிறந்ததாகும்.

இதற்கான தார்மீகப் பொறுப்பும், கடப்பாடும் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், புத்திஜீவிகளையுமே சாரும். இதுவே சாலச் சிறந்ததும் காலத்தின் கட்டாயமுமாகும்.

## பயங்கரவாத வன்செயலினால் சொத்துக்களை இழந்தவருக்கு நஷ்ட ஈடு வழங்கி வைப்பு

1989/90 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாத வன்செயல் காரணமாக வீடு மற்றும் சொத்துக்களை இழந்திருந்தும் இதுவரைகாலம் நஷ்ட ஈடு வழங்கப்படாதவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில், காத்தான்குடியைச் சேர்ந்த மர்ஹூம் எஸ்.எல்.வீ.பரீதா என்பவருக்கு சேரவேண்டிய நஷ்ட ஈட்டினை அவரது புதல்வரிடம் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் வழங்கி வைத்தார்.



ஒல்லிக்குளம், மண்முனை வீதியில் வசித்த மர்ஹூம் எஸ்.எல்.வீ.பரீதா என்பவர் 1989/90 பயங்கரவாத வன்செயலினால் தனது சொத்துக்களை இழந்திருந்தார். எனினும், அவருக்கான இழப்பீடுகள் எதுவும் உரிய முறையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில், 1989/90 காலப்பகுதியில் சொத்துக்களை இழந்தும் இதுவரை காலமும் நஷ்ட ஈடு வழங்கப்படாதவர்களுக்கு துரிதமாக நஷ்ட ஈட்டினை வழங்க புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதற்கமைய, மர்ஹூம் எஸ்.எல்.வீ.பரீதா என்பவருக்கு சேரவேண்டிய ஒன்றரை இலட்சம் ரூபா நஷ்ட ஈட்டினை அவரது புதல்வர் ஏ.ஏ.எம்.அப்ராஸ் என்பவரிடம் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வழங்கி வைத்தார்.



# சிரிய விஷவாயு தாக்குதல்: உயிரிழப்புகள் அதிகரிப்பு

## அவசரமாக கூடுகிறது ஐ.நா. பாதுகாப்பு சபை

## சீரழிவுக்கு ஒபாமா ஆட்சியின் குளறுபடியே காரணம்; சீறும் டிரம்ப்










சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அரசுப்படை விமானங்கள் நடத்திய விஷவாயு குண்டு தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 100இற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இதில் 20 குழந்தைகளும் உள்ளாகுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 550 இற்கும் மேற்பட்டோர் படுகயமடைந்துள்ளனர்.

சிரியாவில் அரசுக்கு எதிராக செயற்படும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் தீவிரவாதிகளை குறிவைத்து அரசு ஆதரவு விமானப்படையின் போர் விமானங்கள் நேற்றுமுன்தினம் விஷவாயு குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இட்லிப் மத்திய மாகாணத்திலுள்ள கான் ஷேகுன் நகரில் நடத்தப்பட்ட இந்த விஷவாயு தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட சுமார் 58 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்ததாக மனித உரிமை கண்காணிப்பகம் முதலில் தெரிவித்து இருந்தது. ஏராளமானோர் காயமடைந்தனர்.

மேலும், விஷவாயு பரவியதால் பொதுமக்கள் பலர் மயக்கம், வாந்தி உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளானர்கள். குறிப்பாக அதிகளவிலான குழந்தைகள் வைத்தியசலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இந்த கோர தாக்குதலில் பலியானவர்களின் எண்ணிக்கை 100 இற்கும் மேலாக அதிகரித்துள்ளதாக ஐ.நா மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மேலும், 550 இற்கும் அதிகமானர் படுகாயங்களுடன் உயிர் தப்பி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துவருகிறதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த 6 வருடங்களில் நிகழ்த்தப்பட்ட கொடூரமான விஷவாயு தாக்குதல் இது என்று சிரிய எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ள நிலையில், இன்னும் அரசு தரப்பில் எந்தவொரு கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

முன்னதாக குளோரின் விஷ வாயுவை பீப்பாயில் அடைத்து சிரிய இராணுவம் ஹெலிகொப்டர் மூலம் வீசியதாக ஐ.நா. தனது விசாரணையில் தெரிவித்துள்ளது. மேலும், இந்த விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக ஐ.நா பாதுகாப்பு சபை அவசரமாக நேற்று கூடியது.

### டிரம்ப் ஆவேசம்

சிரியா வில் ஓயாத உள்நாட்டுப் போர் மற்றும் தற்போது அங்கு பொதுமக்கள் மீது இரசாயன ஆயுதங்களால் தாக்குதல் நடத்தப்பட்டது போன்றவற்றுக்கு ஒபாமா ஆட்சியின் நிர்வாக குளறுபடியே காரணம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குற்றம்சாட்டியுள்ளார்.

சிரிய விஷ வாயு தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது. 'சரைன்' எனப்படும் மிக கொடூரமான இரசாயனத்தை வைத்து தயாரிக்கப்பட்ட விஷவாயு குண்டுகள் இந்த தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்டதாக அமெரிக்க அரசு குற்றம்சாட்டியது.

இந்நிலையில், சிரியாவின் நிலைமை இப்படி படுமோசமாக சீரழிந்ததற்கு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா ஆட்சியின் குளறுபடியே காரணம் என டிரம்ப் நேரடியாக குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சிரியாவிலுள்ள குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்டுள்ள இந்த இரசாயன தாக்குதல் மிக கொடூரமான செயலாகும். இந்த கொடூரத்தை நாகரிகம் அடைந்த உலக நாடுகள் இதை கண்டும் காணாமல் இருந்து விட முடியாது.

இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்துவதற்கு எதிராக எச்சரிக்கைக்கோடு போடப் போவதாக கடந்த 2012ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், நமது நாட்டின் முந்தைய ஆட்சியின் பலவீனம் மற்றும் தீர்மானிக்கும் தன்மையில் உறுதிப்பாடற்ற நிலைப்பாடு ஆகியவற்றை தான் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத்தின் இந்த கொடூரமான செயற்பாடு சுட்டிக் காட்டுகிறது.

சகித்துக் கொள்ள முடியாத இந்த தாக்குதலை கண்டிப்பதில் உலகில் உள்ள நமது நேச நாடுகளுடன் அமெரிக்கா தொடர்ந்து குரல் கொடுக்கும்'' என குறிப்பிட்டுள்ளார்.









# நைஜீரியாவில் மூளை காய்ச்சல்: 336 குழந்தைகள் பரிதாபப் பலி

நைஜீரியாவில் பரவி வரும் மூளை காய்ச்சலுக்கு இதுவரை 336 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச சுகாதார மையம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவில் மத்திய மற்றும் வடமேற்கு பகுதிகளிலுள்ள ஷாம்பாரா, காட்சினா, கெப்பி, நிஜெர், சோகோடோ ஆகிய மாநிலங்களில் கடந்த டிசம்பர் மாதம் முதல் மூளைக்காய்ச்சல் தொற்று நோய் வேகமாக பரவி வந்தது.

குறிப்பாக இந்நோயால் 5 - 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த கோர நோயால் இதுவரை 336 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும், 2997 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் நைஜீரிய அரசு மற்றும் சர்வதேச சுகாதார அமைப்புகள் தெரிவித்துள்ளன.



இந்நோயை கட்டுப்படுத்த 5,00,000 அளவுகள் கொண்ட நோய் தடுப்பு மருந்துகள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இன்னும் 2 மில்லியன் தடுப்பு மருந்துகள் தேவைப்படுவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. ஆனால், இம்மருந்துக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் மாற்று மருந்துகள் ஏற்பாடு செய்யவேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த கோர நோய் அருகிலுள்ள மற்ற நாடுகளுக்கும் பரவலாம் என அஞ்சப்படுவதால், மற்ற நாடுகள் அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். கடந்த 2015ஆம் ஆண்டில் இந்த நோய்க்கு நைஜிரியாவில் மட்டும் 1,100 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ். புதிய கொலை பட்டியலில் டிரம்ப் உட்பட 8 ஆயிரம் பேர்



ஐ.எஸ். தீவிரவாதிகள் புதிதாக கொலை பட்டியலொன்றை வெளியிட்டுள்ளனர். அதில், அமெரிக்க புதிய ஜனாதிபதி டிரம்ப் உட்பட 8 ஆயிரத்து 786 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

ஐ.எஸ். தீவிரவாதிகள் உலக தலைவர்கள் பலருக்கு அச்சுறுத்தலாக உள்ளனர். அவர்கள் அடிக்கடி கொலை பட்டியலை வெளியிட்டு வருகிறார்கள். அதில், இந்த தலைவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

அவர்கள் கொலை பட்டியலிலுள்ள தலைவர்களை கொல்வதற்கு 'தனி ஓநாய் தாக்குதல்' என்று பெயரிட்டுள்ளனர்.


இதன்படி தனி ஆளாக சென்று தலைவர்களை துப்பாக்கியால் சுட்டோ அல்லது வேறு மாதிரியோ கொல்வது திட்டம் ஆகும்.

தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகள் புதிதாக ஒரு கொலை பட்டியலை வெளியிட்டுள்ளனர். அதில், அமெரிக்க புதிய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உட்பட 8 ஆயிரத்து 786 பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்காவை சேர்ந்தவர்கள். அமெரிக்க அரசியல் தலைவர்கள், இராணுவ தளபதிகள், உளவுத்துறை நிபுணர்கள் மற்றும் தீவிரவாதிகள் தாக்குதலை கண்டிக்கும் முஸ்லிம் தலைவர்கள் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இக் கொலை பட்டியலில் உள்ளவர்களின் முகவரி, ஈ-மெயில் முகவரி என அனைத்து விவரங்களும் அந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இதை அவர்கள் இணைய தளத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள்.

அத்துடன் ஒரு வீடியோவும் இணைக்கப்பட்டிருக்கிறது. அதில் பேசியவர், உங்களுக்கு எதிராக எங்களுடைய போர் தொடரும். நீங்கள் எங்களுக்கு எதிராக நடத்தும் ஒவ்வொரு போரும் எங்களை மேலும் வலுவாக்கி வருகிறது. எங்களுடைய எதிர் தாக்குதலை நீங்கள் மிக விரைவில் எதிர் கொள்வீர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

# பாக். தற்கொலை தாக்குதல்: 6 பேர் பலி; 18 பேர் காயம்



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்துக்குட்பட்ட லாகூர் நகரில் நேற்று நடத்த தற்கொலைப்படை தாக்குதலில் 6 பேர் பலியாகினர். 18 பேர் காயமடைந்தனர்.

லாகூரின் இராணுவ பாதுகாப்பு பகுதியில் இந்த குண்டுவெடிப்பில் 4 இராணுவ வீரர்கள் உட்பட 6 பேர் உயிலிழந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்தனர். தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்ட பகுதி பாதுகாப்புப் படையினரின் முழு கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. (பத்திரிகை அச்சுக்கு செல்லும்வரை) தாக்குதலுக்கு எந்த ஒரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை

இந்த தற்கொலைப் படை தாக்குதல் குறித்து லாகூர் பொலிஸ் அதிகாரி, ''இளம் தீவிரவாதி ஒருவர் இராணுவ வாகனத்துக்கு அருகே வந்து தன் உடம்பில் கட்டப்பட்டிருந்த குண்டை வெடிக்கச் செய்தார்'' என்று தெரிவித்துள்ளார்.

## உலகச் செய்திகள்

# ஈராக் தற்கொலை தாக்குதல்: 22 பேர் பலி; 31 பேர் காயம்

ஈராக்கின் பக்தாத் நகரின் வடக்கு பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தின் வடக்கு பகுதியான டிக்ரிட்டில் காவல் துறையை சேர்ந்த ரோந்து படையினரை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் தற்கொலைப் படையை சேர்ந்த ஐந்து பேர் காவல் அதிகாரியின் வீட்டினுள் நுழைந்து தாக்குதல் நடத்தினர் என சலாஹூதீன் மாகாண சபையை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்கொலைப்படையை சேர்ந்த மூன்று பேர் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். எனினும், இரண்டு பேர் தங்கள் மீது கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க செய்தனர் என அகமது அல்-கரீம் என்பவர் தெரிவித்துள்ளார். குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களில் 10 பேர் காவலர்கள் என்றும் இந்த தாக்குதலில் 31 பேர் காயமுற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை இந்த தாக்குதல் சம்பவத்திற்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருந்தும் மொசூல் துப்பாக்கிசூட்டில் நடந்த இதே போன்ற தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. ஸுன்னி தீவிரவாத அமைப்பு அடிக்கடி ஈராக் பாதுகாப்பு படையினரை எதிர்த்து தாக்குதல் நடத்தி வருகிறது

# பன்னாட்டு இஸ்லாமிய இராணுவ தலைவராக ரகீல் ஷெரிப் தேர்வு

சவூதி தலைமையிலான பன்னாட்டு இஸ்லாமிய இராணுவத்தின் தலைவராக பாகிஸ்தான் முன்னாள் இராணுவத் தளபதி ரகில் ஷெரீப் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு ஈரான் அதிருப்தி தெரிவித்துள்ளது.


சவூதி தலைமையில் 39 நாடுகள் ஒன்றிணைந்து இஸ்லாமிய இராணுவ கூட்டமைப்பு என்ற தீவிரவாத தடுப்பு படையை அமைத்துள்ளது. துருக்கி, ஐக்கிய அமீரகம், பஹ்ரேன், பங்களாதேஷ் உள்ளிட்ட பல இஸ்லாமிய நாடுகள் இக்கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளனர்.

ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இஸ்லாமிய நாடுகளில் செயற்படும் தீவிரவாத குழுக்களின் தாக்குதல்களை தடுப்பதும், தீவிரவாதிகளை வேட்டையாடுவதும் இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக, சிரியா, ஈராக் உள்ளிட்ட நாடுகளில் உள்ள சில பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டு அங்கு வெறியாட்டத்தில் ஈடுபட்டுவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை வேட்டையாடுவது, இந்தப் படையின் தலையாய இலக்காகும்.

இப் படையின் தலைவராக சமீபத்தில் ஓய்வுபெற்ற பாகிஸ்தான் இராணுவத் தளபதி ரகில் ஷெரீப் கடந்த ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டார். விரைவில் அவர் பொறுப்பேற்கவுள்ள நிலையில் ஈரான் அரசு ரகில் ஷெரீப் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு அதிருப்தி தெரிவித்துள்ளது.

இப் பிரச்சனை தொடர்பாக அதிக கவனம் எடுத்துக் கொள்வதாகவும், ஒட்டுமொத்த இஸ்லாமிய நாடுகளின் உறவை இது சீர்குலைத்து விடக்கூடாது எனவும் ஈரான் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதுன. இதுபோன்ற விவகாரங்களில் ஈரான் அதிருப்தி தெரிவிப்பது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.பியசேன காலமானார்



சிரேஷ்ட ஊடகவியலாளரும், சிறந்த எழுத்தாளரும், இராஜதந்திர அதிகாரியுமான எஸ்.பியசேன நேற்று அதிகாலை காலமானார்.

நேற்று காலை உணவை உட்கொண்டவேளையில், திடீரென ஏற்பட்ட சுகயீனத்தால் ஜயவர்தனபுர வைத்திய சாலையில் அனுமதித்தவேளையில் சிகிச்சை பலனின்றி தனது 94 ஆவது வயதில் காலமானார்.

1942 ஆம் ஆண்டு ஊடகவியலாளராக தனது கடமைகளை மேற்கொள்ள ஆரம்பித்த இவர் ஊடகத்துறையில் துணை செய்தி ஆசிரியர், செய்தி ஆசிரியர் ஆகிய பிரிவுகளில் பணியாற்றியுள்ளார். தினசரி லங்காதீப பத்திரிகையில் வெள்ளிக்கிழமை பிரதிபலிப்பு கட்டுரை மற்றும் பத்திகளையும் எழுதியுள்ளார்.

கொழும்பு ஆனந்த கல்லூரியின் பழைய மாணவரான இவர், இந்தியா கொல்கொத்தாவில் பிகொம் கற்கை நெறியையும் கற்று, அங்குள்ள இடதுசாரி அரசியல் கட்சிகளிலும் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளார்.

லங்கா சமசமாஜக்கட்சியின் ஆரம்பகர்த்தவாக இருந்த தனது தந்தையினால் இலங்கை இடதுசாரி இயக்கங்களிலும் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவுடன் இணைந்து இணைத்தலைவராகவும் செயற்பட்டார். அந்தக்கட்சியினால் முதன் முதலாக வெளியிட்ட பத்திரிகையான ஜனசக்தி பத்திரிகையிலும் பணியாற்றினார்.

மேலும், இந்திய வானொலிச் சேவையில் 11 வருடங்கள் சேவையாற்றிய இவர், இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகராகவும் சேவையாற்றினார்.

முன்னாள் ஜனாதிபதி மறைந்த ஜே.ஆர். ஜயவர்தனவின் செய்திப்பிரிவின் செயலாளராகவும் செயற்பட்ட அவர், லங்காதீப பத்திரிகையிலும் தமது சேவையை தொடர்ந்தார். இலங்கையின் பாராளுமன்றத்தில் முதலாவதாக சிங்கள மொழியில் மொழிபெயர்ப்பு செய்தவர் என்ற கௌரவத்தையும் பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியா பிரஜையான இவர், கற்றுலா விசாவின் மூலம் இலங்கைக்கு வந்துள்ள வேளையிலேயே உயிரிழந்துள்ளதோடு, பனாகொட ரோமியேல் மாவத்தை வீட்டில் வசித்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவருடைய மகனான ஊடகவியலாளர் சுதீர சேனாதீர ஜனாதிபதி ஊடகப்பிரிவில் பணிப்பாளராக கடமை புரிகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டுக்காக கிடைத்த வெற்றி

## நிதி அமைச்சர் ரவி



ஆசியாவின் பசுபிக் வலயத்தின் சிறந்த நிதி அமைச்சராக தெ பெங்கர் சஞ்சிகையினால் விருதினை பெற்ற நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று பாராளுமன்றத்திற்கு சென்றபோது வரவேற்பளிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டதோடு, நிதி அமைச்சர் சர்வதேச ரீதியாகவும் அடையாளம் காணப்பட்டமையால் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

வரவேற்ற சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நிதி அமைச்சர்,

எனக்கு கிடைத்த இவ்விருதானது தனிப்பட்ட வெற்றி அல்ல என்றும், நாட்டுக்காக பெற்றுகொள்ளப்பட்ட வெற்றி என்றும் தெரிவித்தார். இச்சந்தர்ப்பத்தில், ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான கபீர் ஹாசிம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட ஐ.தே.கவின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## மாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புத்தாண்டின் பின் தேர்தல் பற்றித் தீர்மானம் எடுக்கும் போது இரு தேர்தல்களையும் ஒரே முறையில் நடத்துவது பற்றி மற்றக் கட்சிகளுடனும் பேசித் தீர்மானிக்க வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

அரசின் பொருளாதாரத் திட்டத்தை ஒருமித்து முன்னெடுப்பது பற்றி எல்லோரும் ஒருமித்த கருத்தில் செயற்படுவதன் அவசியம் பற்றியும் பிரதமர் இங்கு வலியுறுத்திக் கூறியதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

பத்து இலட்சம் பேருக்கு வேலை வழங்கும் திட்டத்தையும் விரைவில் ஆரம்பிப்பதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## பிற்போடப்பட்டது...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் பதவி மாற்றங்கள் பற்றி எதுவும் பேசப்படவில்லை என்றும் தெரிவித்த அமைச்சு, அது பற்றி பிறிதொரு கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிவித்தார்.

இதே நேரம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில்

மே மாதத்திற்குப் பின்னரே ஐ.தே. கட்சியின் மாற்றங்கள் இடம்பெறும் என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற அமைச்சின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதாவது ஐ.தே.கட்சியில் மாற்றம் தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனினும் கட்சியை பலமடையச் செய்யும் நோக்கில் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அது ஏப்ரல் புதுவருடத்துக்குப் பின்னர் அல்லது மே க்கு பின்னரே இடம்பெறும்.

இது கட்சியை ஒருபோதும் பலவீனப்படுத்தாது என்றும் தெரிவித்தார்.

## மின்சார...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சங்கத்தின் பிரதம செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

இதன் மூலம் அனைத்து சேவையாளர்களின் பிரச்சினைகளையும் தீர்க்கவுள்ள தாகவும், வாராந்த சேவை இடைநிறுத்தப்படுகின்றமைக்கு தீர்வு காணும் நோக்கிலுமே இவ்வேலை நிறுத்தப் போராட்டம் நடாத்தப்படுகின்றது.

மின்சாரசேவையில் உயர் பதவிகளில் இருப்போர் அதாவது பொறியியலாளர்களுக்கு கூடுதலான சம்பளம் வழங்கப்படுவதோடு, உதவியாளர்களுக்கு இவ்வாறான சம்பளம் கிடைக்காமல் உள்ளது. 6 இல் ஒரு பங்கு வீத சம்பளத்தை வலியுறுத்தி அண்மையிலும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும் அதற்கு எவ்வித தீர்வும் இல்லை. இவர்களுக்கு கீழ் வேலைசெய்வோருக்கு நிதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தியே இவ்வாறான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அத்தோடு, இரண்டு வருடங்களுக்கும் மேலாக இவ்வாறு சம்பளம் அதிகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டும் வருகின்றது.

அத்தோடு, தேசிய மின்சாரசபை ஊழியர்சங்கம், இலங்கை மின்சாரசபை ஊழியர் சங்கம் மற்றும் தொழிலாளர் சங்கங்கள், காரியாலய உதவியாளர் சங்கம், அடங்கலாக 32 தொழிற்சங்கள் ஒன்றிணைந்து இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுகின்றன.

இவ்வாறான ஒன்றிணைந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் நாட்டின் கடுமையான பிரச்சினை ஏற்படுவதோடு, இதனால் ஏற்படும் அசௌகரியங்கள் மக்கள் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றது என்று தெரிவித்தார்.

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உள்ளடக்கி பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக கூட்டத்தில் பங்குபற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் சருக் உட்பட பலரும் சுட்டிக்காட்டினர்.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் உள்ளடக்கிய சட்டத்தரணிகள் குழு ஒன்றுக்கு வழக்கினைத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

# நாம்புலுவை நிகழ்வில் ரவூப் ஹக்கீம் இன்று

(பாருஷா)

கம்பஹா மாவட்டம், மீரிகம தேர்தல் தொகுதியில் பஸ்யால, நாம்புலுவ பாபுஸ் ஸலாம் மகாவித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை (06)முற்பகல் நடைபெறும் வருடாந்த பரிசளிப்பு விழாவில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களும், சாதனை நிலைநாட்டிய மாணவர்களும் பங்களிப்புச் செய்த ஆசிரியர்களும் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதில் மேல் மாகாண சபை கம்பஹா மாவட்ட உறுப்பினர் ஷாபி ரஹீம் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## வில்பத்து...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வன விலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென தேசிய ஒன்றிணைந்த கமிட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒடார குணவர்தனவின் பங்களிப்புடன் கொழும்பில் செவ்வாயன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஜனாதிபதியினால் கையொப்பமிடப்பட்ட வர்த்தமானி மூலம் 2012ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமே இடம் பெற்றுள்ளதாக சூழலியலாளர் தினேஷ் மல்லிகாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி, 2012 இல் வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஐந்து பிரதேசங்களை உள்ளடக்கி வனப்பாது காப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

இது திருப்திகரமான ஒரு செயற்பாடாக இருந்தாலும் போதுமானதல்ல.

இந்தக் காணிகளைப் பயன்படுத்தும் முறை பற்றி பொது மக்கள் அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் இச் செய்தியாளர் மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## நாவலப்பிட்டி..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்தில் 53 பேர் படுகாயங்களுக்குள்ளாகி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், மேலும் இதில் சிலர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் பாடசாலை மாணவர்களும் காயங்களுக்குள்ளாகியிருப்பதாக தகவல் தெரிவிக்கின்றது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாலபே...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வீரர் வசீம் தாஜுதீனின் உறுப்புகள் இருப்பது உண்மையா, என ஆராய்வதற்கு பொரளை ஜின்டெக் நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மரபணு அறிக்கையின் பிரகாரம், அந்த உடற்பாகங்கள் வசீம் தாஜுதீனின் அல்ல என இரகசிய பொலிஸார் நேற்று நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

பொரளை ஜின்டெக் நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி ருவன் இலேபெருமவினால் இதுதொடர்பில் தமக்கு தெரியப்படுத்தியதாக முறைப்பாட்டை ஆராயும் பிரதி சொலிசிடர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தொடர்ந்தும் இது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, அவர் நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வசீம் தாஜுதீனின் உடற்பாகங்கள் மாயமானமை தொடர்பில் இரகசிய பொலிஸார் பிரத்தியேக விசாரணைகளை நடத்தியதுடன், இதுதொடர்பிலான அறிக்கை கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இரகசிய பொலிஸார் இதன்போது தெரிவித்தனர்.

இதேவேளை, றக்பி வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலை தொடர்பிலான சாட்சிகளை மறைக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, இவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வ பதில் நீதவான் பிரசாத் சில்வா உத்தரவிட்டார்.

## விடுமுறையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சமூகத்தவருக்கு இடையூறின்றி முன்மாதிரியாக செயற்படுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பிரசாரக் குழுவின் செயலாளர் அஷ்ஷெய்க் எச். உமர்தீன் சகல முஸ்லிம்களிடமும் வேண்டுகோள் விடுக்கிறார்.

இஸ்லாமிய வரம்பு பேணி விடுமுறை காலத்தை கழிப்போம் என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆரோக்கியமும், ஓய்வும் மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள அருட் செல்வங்களில் உள்ளவையாகும்.இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதர்களில் அதிகமானோர் இரண்டு அருட் செல்வங்களின் விடயத்தில் (ஏமாற்றப்பட்டு) இழப்புக்குள்ளாகி விடுகின்றனர். ஆரோக்கியம், ஓய்வு என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார்கள். இவ்வகையில் இந்த இரு அருட் செல்வங்களையும் முறையாக பயன்படுத்திக் கொள்ள மனிதர்கள் தவறி விடுவதால் பெரும்பாலான மனிதர்கள் நஷ்டத்திற்கு உள்ளாகி விடுகின்றனர்.

தற்போது ஏப்ரல் விடுமுறைக்காக பாடசாலைகள் மூடப்படுகின்றன. தொடராக நான்கு மாதங்கள் பாடசாலை சென்று வந்த நம் பிள்ளைகள் விடுமுறை பெறும் காலம் இதுவாகும். இக்கால கட்டத்தில் எம்மில் சிலர் அவர்களை அழைத்துக் கொண்டு விடுமுறையை கழிப்பதற்காக உல்லாசப் பிரயாணங்கள் மேற்கொள்கின்றனர். பிள்ளைகளையும், குடும்பத்தவர்களையும் இவ்வாறு அழைத்துச் சென்று ஊர்களையும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்த்து வருவது இஸலாமிய போதனைகளுக்கு முரணானதல்ல.

என்றாலும் நாம் முஸ்லிம்கள் என்ற வகையில் எமது செயற்பாடுகள் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி அமைய வேண்டும்.

ஆடைகள் அணிவது முதல் எமது உணவு, குடிப்பு ஆகிய யாவற்றிலும் ஹலால் ஹராம் பேணி இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். ஆடல், பாடல், பாட்டுக் கச்சேரிகள் என்பவற்றில் கலந்து கொள்ளுதல், மதுபானம் அருந்துதல், பிறருக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொள்ளுதல் போன்ற இஸ்லாமிய போதனைகளுக்கு முரணான விடயங்களை முற்று முழுதாக தவிர்ந்து கொள்ள வேண்டும். எனவே எமது விடுமுறை காலத்தில் உரிய நேரத்தில் தொழுது, சன்மார்க்க விளக்கங்களைக் கேட்டு, நல்ல விடயங்களில் நேரத்தை கழிக்குமாறும், சுற்றுலா செல்வோர் இஸ்லாமிய வரையறைகளையும் ஒழுக்க விழுமியங்களையும் பேணி பிற சமூகத்தவருக்கு முன்மாதிரியாக செயற்படுமாறும் சகல முஸ்லிம்களையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பிரசாரக் குழு கேட்டுக் கொள்கின்றது.

## படை முகாம்களில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடனான கலந்துரையாடலியே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கருமலையூற்று பள்ளிவாசலை அண்மித்துள்ள இராணுவ முகாம், தோப்பூர் 10 வீட்டுத்திட்டத்தை ஆக்கிரமித்துள்ள பாதுகாப்பு முகாம், மூதூர் பிரதேசத்திலுள்ள தக்வாநகர் கடற்படை முகாம் மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாலமுனை கடற்கரையோரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு முகாம் என்பவற்றை அகற்றி அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபிக், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் மன்சூர் ஏ. காதிர், முப்படை அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கருமலையூற்று பள்ளிவாசல் காணிகள் இராணுவத்தினால் சுவீகரிக்கப்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்துமாறும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த மாதம் பாராளுமன்றத்தில் காரசாரமான உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

இந்நிலையிலேயே குறித்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை அங்கிருந்து அகற்றுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

காணி சுவீகரிப்பு சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கருமலையூற்று பள்ளிவாசல் மற்றும் அதனை அண்டியுள்ள காணி என்பவற்றைச் சேர்த்து 4.65 ஹெக்டேயர் பரப்பளவுடைய காணியை இராணுவத்தினர் தேவைக்காக சுவீகரிப்பதற்கான அறிவித்தலொன்றை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்றில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வாசித்துக்காட்டப்பட்டது.

அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கவுறிர பெர்னான்டோ குற்றச் சாட்டுகளை ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

இலஞ்ச ஆணைக்குழு குற்றச் சாட்டுடன் வேறு எந்த ஆவணத்தையும் முன்வைக்கவில்லை என்றும் சட்டத்தரணி தெரிவித்தார்.

அமைச்சர் பௌசி சார்பில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைக்கான தீர்ப்பு எதிர்வரும் மேமாதம் 3ஆம் திகதி வழங்கப்படும் என நீதவான் தெரிவித்தார்.

அனர்த்த நிவாரண அமைச்சருக்குரிய ஒரு கோடி 95 இலட்சம் பெறுமதியான ஜீப் வண்டியை சட்ட விரோதமாகப் பயன்படுத்தியதாக இலஞ்ச ஆணைக்குழு இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளது.

## இலங்கைக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உறுதி செய்துள்ளதாக கட்டார் வெளிவிவகார அமைச்சின் டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் புகழ்மிக்க சுற்றுலாத்தலங்களாக கண்டி உட்பட மலையகத்தில் வேகமாக பரவும் குறித்த வைரஸ் காரணமாகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு,இந்த தொற்றினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பல மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் சுகாதார பிரச்சினை சீராகும் வரையில் கட்டார் பிரஜைகள் இலங்கைக்கு பயணிக்க வேண்டாம் கட்டார் வெளிநாட்டு தூதுவராலயம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, மாத்தளை மாவட்டத்தில் பரவியுள்ள எச்1என்1 வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களை பிரிதொரு வார்டில் சிகிச்சையளிக்கவும் குறித்த வைத்தியசாலைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

குறித்த வைரஸினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த 5 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும், சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள் வைத்தியசாலையில் உள்ளார்கள் என்றும், வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், வைரஸ் தொற்றின் காரணமாக பேராதனை பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பேராதனை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடத்தும் கலைமாணிப் பட்டப்படிப்பின் முதலாம் வருட (100 நிலை) பரீட்சைகள் கால வரையரையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

பேராதெனிய பல்கலைக்கழக பிரதேசத்தில் பரவிவரும் ஒருவகையான காய்ச்சல் காரணமாகவே மேற்படி பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளது.

வெளிவாரி தொடர்நிலைக் கல்வி மையம் நடத்தும் கலைமாணிப் பட்டப்படிப்பின் முதலாம் வருட (100 நிலை) பரீட்சைகள் இன்று ஆரம்பமாகி 30ஆம் திகதி வரை நடைபெற இருந்த நிலையிலேயே இவ்வாறு கால வரையரையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு புதிய கல்வித் திட்டத்தின் கீழ் உயர்தரத்துக்கு தோற்றிய மாணவர்கள் 6 வருடங்களின் பின்னர் வெளிவாரி பரீட்சைக்காக இன்று தோற்ற இருந்தனர்.

நாடு முழுவதும் ஏஎச்1என்1 நோய் இனங்காணப்பட்டுள்ளதாக 'காதார சேவைகளின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்திருந்தது.

இதேநேரம், பேராதனைப் பல்கலைக்கழகமும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் விடுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். பல்கலைக் கழகத்தை அண்மித்த பகுதிகளில் ஒருவகை காய்ச்சல் பரவுவதாலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் 500 பேரளவில் பல்கலைக்கழக சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்றதைத் தொடர்ந்தே, நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர கல்வி நடவடிக்கைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை - பங்களாதேஷ் டி20 தொடர்:
# மாலிங்க, குசலின் அதிரடியில் தொடரை வெல்லுமா இலங்கை?





பீ.எப்.எம் றிஷாட்

குசல் ஜனித் பெரேராவின் அதிரடியான 77 ஓட்டங்களின் உதவியுடன் 6 விக்கட்டுகளால் வங்கதேசத்தை வெற்றிபெற்ற இலங்கை அணி இரு போட்டிகள் கொண்ட இருபதுக்கு -20 தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.இந்நிலையில் 156 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி குசல் ஜனித் பெரேராவின் அதிரடியான ஆட்டத்தின் உதவியுடன் 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.2012ஆம் ஆண்டுக்குப்பிறகு பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற 12 போட்டிகளின் பிறகு டி20 போட்டியில் இலங்கை முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான வெற்றியைத் தீர்மானிக்கும் 2ஆவதும் கடைசியுமான டி20 போட்டி இன்று இரவு பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர் ஆகியன 1க்கு 1 என சமநிலையில் நிறைவடைந்துள்ள நிலையில், இன்று ஆரம்பமாகவுள்ள டி20 தொடர் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவுள்ளது.

உபாதை காரணமாக இலங்கை அணியில் இடம்பெறாமல் இருந்த அனுபவமிக்க வீரர்களான லசித் மாலிங்க மற்றும் குசல் ஜனித் பெரேரா ஆகியோரின் பங்களிப்பு இன்றைய போட்டியிலும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.அதிலும் குறிப்பாக முதல் போட்டியில் களமிறங்கிய அதே இலங்கை அணி இன்றைய போட்டியிலும் களமிறங்குவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.எனினும், பங்களாதேஷ் அணியின் பலமான துடுப்பாட்ட வரிசையை மாலிங்க, குலசேகர, சிக்குகே மற்றும் திசர ஆகிய அனுபவமிக்க வீரர்களின் பங்களிப்புடன் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அணி திட்டங்களை மேற்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில், பங்களாதேஷ் அணியைப் பொறுத்தமட்டில் இலங்கைச் சுற்றுப்பயணத்தை சிறப்பாக எதிர்கொண்டு பலம்பெருந்திய அணியாக இன்றைய டி20 போட்டியில் களமிறங்கும் என்பதில் சந்தேகமில்லை.அவ்வணியின் தலைவர் மஷ்ரபி முர்தஷாவின் இறுதி டி20 போட்டியாக அமையவுள்ள இப்போட்டியில் வெற்றிபெற்று தமது கௌரவத்தை தக்கவைத்துக் கொள்ளவும் அவ்வணி திட்டங்களை வகுத்துள்ளது. இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான முக்கியமானதும் இறுதியுமான 2ஆவது இருபதுக்கு -20 போட்டி இன்று இரவு 7 மணிக்கு கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டி20 இலிருந்து மஷ்ரபி ஓய்வு

இலங்கை அணிக்கெதிராக இன்று நடைபெறவுள்ள டி20 தொடருடன் பங்களாதேஷ் அணியின் தலைவர் மஷ்ரபி மோர்டசா ஓய்வு பெறபேவதாக அறிவித்துள்ளார்.

இரண்டு போட்டிகள் கொண்ட டி20 தொடரின் முதல் போட்டி முடிவடைந்துள்ள நிலையில், முதல் போட்டியின் போது தனது ஓய்வு குறித்த அறிவிப்பை போட்டியின் நாணயச்சுழற்சியின் பின்னர் திடீரென அவர் வெளியிட்டார். இது குறித்து மஷ்ரபி மோர்டசா கூறுகையில்,

இதுதான் பங்களாதேஷ் அணிக்காக நான் விளையாடும் கடைசி டி20 கிரிக்கெட் தொடராகும். பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, எனது குடும்பம், நண்பர்கள், அணி வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் கடந்த 15 -16 வருடங்களாக எனக்கு ஆதரவாக இருந்த ரசிகர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.இதேவேளை, பங்களாதேஷ் டி20 அணியின் தலைவராக சகிப் அல்-ஹசனை நியமிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக பங்களாதேஷ் கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# டி20 அரங்கில் மாலிங்க சாதனை

மாலிங்கவின் அபார பந்துவீச்சு மற்றும் குசல் ஜனித் பெரேராவின் அதிரடியான 77 ஓட்டங்களின் உதவியுடன் 6 விக்கட்டுகளால் வங்கதேசத்தை வெற்றிபெற்ற இலங்கை அணி இரு போட்டிகள் கொண்ட இருபதுக்கு -20 தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.உபாதை காரணமாக சுமார் ஒரு வருடங்களாக எந்தவொரு சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றாத மாலிங்க, கடந்த பெப்ரவரி மாதம் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக நடைபெற்ற டி20 போட்டியில் மீண்டும் களமிறங்கினார்.எனினும், 2015 நவம்பர் மாதம் மாலிங்க இறுதியாக இலங்கையில் விளையாடினார்.ஆனால் 'மார் ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு சொந்த மண்ணில் களமிறங்கிய நட்சத்திர வேகப்பந்துவீச்சாளர் இப்போட்டியில் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உலக டி20 அரங்கில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி வீரர்களின் பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறி புதிய சாதனை படைத்தார்.

2006ஆம் ஆண்டு முதல் உலக டி20 அரங்கில் விளையாடி வருகின்ற மாலிங்க, இதுவரை 66 போட்டிகளில் பங்குபற்றி 86 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இப்பட்டியலில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சஹிட் அப்ரிடி, 97 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி முதலிடத்தில் உள்ளதுடன், 85 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள உமர் குல் 3ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.எனினும் இப்பட்டியலில் இலங்கை வீரர்களான அஜந்த மெண்டிஸ் 66 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 6ஆவது இடத்திலும், நுவன் குலசேகர 65 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 8ஆவது இடத்திலும் உள்ளனர்.

# போல்ட்டை மிஞ்சிய 12 வயது சிறுமி



உலக மெய்வல்லுனர் அரங்கில் பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரரான ஜமைக்காவின் உசைன் போல்ட்டின் வேகத்தைக் கொண்ட அதே ஜமைக்காவைப் பிறப்பிடமாகக் கொண்ட 12 வயது சிறுமியொருவர் புது அவதாரம் எடுத்துள்ளார்.

ஜமக்காவின் 2017ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி கடந்த சில தினங்களுக்கு முன் நடைபெற்றது.இதில் சென்.ஜாகோ மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பையன்னா விஸ்டன் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 23.72 செக்கன்களில் ஓடிமுடித்து 1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் பங்குபற்றிய ஜமைக்காவைச் சேர்ந்த ப்ளோரன்ஸ் கிரிபிப்ட் வீராங்கனையால் நிகழ்த்திய 21.34 செக்கன் உலக சாதனையை 2 நிமிடங்களில் தவறவிட்டார்.

இதேவேளை,பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்ட அந்த மாணவி போட்டித் தூரத்தை 11.86 செக்கன்களில் ஓடிமுடித்து முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், உலகின் நட்சத்திர வீரர் உசைன் போல்ட்டின் வேகத்தை நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், கடந்த 2001ஆம் ஆண்டு இதே பாடசாலை மெய்வல்லுனர் போட்டித் தொடரில்கலந்துகொண்ட உசைன் போல்ட், 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 22.04 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப்பதக்கத்தை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப்பில் இஷாந்த்



ஐ.பி.எல்., வீரர்கள் ஏலத்தில் விலை போகாத இந்திய வேகப்பந்துவீச்சாளர் இஷாந்த் சர்மா, பஞ்சாப் அணியில் தஞ்சம் அடைந்துள்ளார்.

ஐ.பி.எல்., தொடரின் 10 ஆவது சீசன் நேற்று ஆரம்பமாகியது. இதற்கான வீரர்கள் ஏலம் கடந்த பெப்ரவரி மாதம் பெங்களூரில் நடைபெற்றது. இதில் ரூ. 2 கோடி அடிப்படை தொகையாக நிர்ணயிக்கப்பட்டிருந்த இந்திய வேகப்பந்துவீச்சாளர் இஷாந்த் சர்மாவை எந்த ஒரு அணியும் ஏலத்தில் எடுக்க முன்வரவில்லை. இதனால் விலை போகாத வீரர்கள் பட்டியலில் இணைந்தார்.

இந்நிலையில் இஷாந்த் சர்மாவை, பஞ்சாப் அணி நிர்வாகம் ஒப்பந்தம் செய்துள்ளது. கடந்த தொடர்களில் கொல்கத்தா (31 போட்டி, 25 விக்கெட்), டெக்கன் சார்ஜஸ் (12 போட்டி, 11 விக்கெட்), ஹைதராபாத் (23 போட்டி, 19 விக்கெட்), புனே (4 போட்டி, 3 விக்கெட்) அணிகளுக்காக மொத்தம் 70 போட்டிகளில் (58 விக்கெட்) விளையாடினார். இதுவரை 77 டெஸ்ட் (218 விக்கெட்), 80 ஒருநாள் (115), 14 சர்வதேச டி20 (8) போட்டிகளில் விளையாடியுள்ளார்.

# டி20 தரப்படுத்தலில் இமாத் முன்னிலை

உலக டி20 தரவரிசையில் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சாளர் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அத்துடன் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தாஹிர் முதலிடத்திலும், இந்திய வீரர் ஜஸ்பிரிட் பும்ரா 3ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான இறுதி டி20 போட்டியில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, நான்கு போட்டிகளைக் கொண்ட தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதன்மூலம், சர்வதேச கிரிக்கெட் பேரவையின் டி20 போட்டிகளின் தரவரிசையில் பாகிஸ்தான் அணி நான்காவது இடத்திற்கு முன்னேறியது.

# உலக கழக கால்பந்து கிண்ணம் கட்டாரில் நடத்த பேச்சுவார்த்தை




2022ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்து தொடருக்கு முன் கழகங்களுக்கிடையிலான உலகக்கிண்ண கால்பந்து தொடரை அந்நாட்டில் நடத்த கட்டார் கால்பந்து சம்மேளனம் பிபாவுடன் பேச்'வார்த்தை நடத்தி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகின் பிரபல கால்பந்து கழகமான ஸ்பெய்னின் ரியல் மெட்ரிட் கழகத்தின் ஏற்பாட்டில் பிபாவின் பூரண அனுசரணையுடன் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் இடம்பெற்று வருகின்ற உலகின் முன்னணி கால்பந்து கழகங்கள் பங்குபற்றும் இத்தொடரை 2022 உலகக்கிண்ண கால்பந்து தொடரை சிறப்பாக நடத்துவதற்கு முன்னேற்பாடாக கழகங்களுக்கிடையிலான உலகக்கிண்ணத்தை பரீட்சார்த்த போட்டியாக அங்கு நடத்தவும், அதனைத்தொடர்ந்து 17 மற்றும் 20 வயதிற்குட்பட்ட உலகக் கிண்ண கால்பந்து தொடர்களை நடத்துவதற்கும் கட்டார் கால்பந்து சம்மேளனமும், அந்நாட்டு அரசும் பிபாவுடன் ஆரம்பகட்ட பேச்'வார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் 2021ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவிருந்த பிபாவின் அங்கத்துவக் கிண்ண கால்பந்து தொடரை அங்கு நிலவுகின்ற உஷ்ணமான காலநிலை காரணமாக கைவிடுவதற்கும் பிபா தீர்மானித்தது.

எனவே 2 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற 17 மற்றும் 20 வயதிற்குட்பட்ட உலகக்கிண்ண கால்பந்து தொடர்கள் அடுத்த முறை கட்டாரில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் மத்திய கிழக்கு நாடொன்றில் முதற்தடவையாக நடைபெறவுள்ள 2022 உலகக் கிண்ண கால்பந்து தொடருக்கு ஆரம்பம் முதலே பல்வேறு எதிர்ப்புக்களுக்கும், சர்ச்சைகளுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. அதிலும் குறிப்பாக அங்கு நிலவுகின்ற உஷ்ணமான காலநிலை கால்பந்து தொடரை பெரிதும் பாதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டன.அதன்படி கால்பந்து வரலாற்றில் முதற்தடவையாக உலகக்கிண்ணப் போட்டித் தொடரை சர்வதேச கால்பந்து அட்டவணைக்கு மாற்றமாக கட்டாரின் காலநிலைக்கு ஏற்றது போல மாற்றியமைப்பதற்கு பிபா நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.எனினும், உலகக்கிண்ணத்தை நடத்த சுமார் 200 பில்லியன்களை செலவிடவுள்ள கட்டார், அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு வாராந்தம் 500 மில்லியன்களை செலவிட்டு வருவதாக அந்நாட்டு நிதி அமைச்சர் அலி சரீப் அல்-இமாதி அண்மையில் தெரிவித்தார்.





அக்குறணை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற கால்பந்தாட்ட போட்டியில் அக்குறணை லங்கேசியா விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவானது. 43ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்கு முன்னோடியாக அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலை மைதானத்தில் கடந்த முதலாம் திகதி இடம் பெற்றது.இப் போட்டியில் இரண்டாம் இடத்தைஅக்குறணை சாஹிரா விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது. மத்திய மாகாண சபை உறுப்பினர் எ.எம்.பீ.த அல்விஸ் வெற்றி பெற்றவர்களுக்கான கேடயங்களை வழங்கி வைத்தார். (மொஹமட் ஆஸிக்)

# இலங்கை அணிக்கு அபாரம்



இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது டி20 போட்டியின் போது இலங்கை அணி குறித்த நேரத்தில் பந்துவீச தவறிய குற்றச்சாட்டில் இலங்கை அணியின் தலைவர் உபுல் தரங்க உள்ளிட்ட இலங்கை அணியின் ஏனைய வீரர்களுக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஐ.சி.சி ஒழுக்க விதிகளின் 2.5.1 சரத்துக்கு அமைய குறித்த நேரத்தில் 20 ஓவர்களை பந்துவீச உபுல் தரங்க உள்ளிட்ட இலங்கை வீரர்கள் தவறவிட்டனர். இந்நிலையில், போட்டியின் நடுவர்களாக கடமையாற்றிய ரென்மோ மார்டினஸ், ரவீந்ர விமலசிறி மற்றும் ருச்சிர பல்லியகுருகேவின் முறைப்பாட்டுக்கமைய ஐ.சி.சியின் போட்டி நடுவர் அண்டி பைகோப்டினால் இவ் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இலங்கை அணியின் தலைவர் உபுல் தரங்கவுக்கு போட்டி சம்பளத்திலிருந்து 20 சதவீதமும், ஏனைய வீரர்களுக்கு 10 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# பட்டம் வென்றார் நிலூக



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கையின் பெட்மிண்டன் சம்பியன் நிலூக கருணாரத்ன 2017ஆம் ஆண்டிற்கான 32ஆவது பிரேசில் சர்வதேச பெட்மிண்டன் கிண்ணத் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியனாகத் தெரிவானார்.

கருணாரத்ன, இத்தொடரின் இறுதிப் போட்டியில் உலக தரவரிசையில் 56ஆம் நிலை வீரரான வைகர் ஒகாலோவை வீழ்த்தியதன் மூலம் மேற்படி கிண்ணத்தைத் தனதாக்கியுள்ளார்.

பிரேசில் சர்வதேசக் கிண்ணத் தொடர் சர்வதேச பெட்மிண்டன் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற சுற்றுப் போட்டிகளில் மிக முக்கியமானதாகும். அதேபோன்று, உலகின் சகல பாகங்களிலிருந்தும் வீரர்களை பங்குபற்றலுடன் 32ஆவது வருடமாக இம்முறை இடம்பெற்ற சுற்றுத்தொடராகவும் இடம்பெற்றது.

இந்நிலையில், 32 வயதான நிலூக, உலகின் 56ஆம் நிலை வீரரான பிரேசிலின் வைகர் ஒகாலோவை இறுதி மோதலில் எதிர்கொண்டார்.

முதலாவது செற்றின் ஆரம்பம் முதலே அசத்திய ஒகாலோ, நிலுகவை 9-21 என இலகுவாக வீழ்த்தினார். பின்னர் மீண்டெழுந்த நிலூக எஞ்சியிருந்த இரண்டு செற்களிலும் அபாரமாக விளையாடி முறையே 21-14, 21-18 என வெற்றிகொண்டு கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டார். இச்சுற்றுத் தொடரின் வெற்றியோடு உலக பெட்மிண்டன் தரவரிசையில் ஓர் இடம் முன்னகர்ந்துள்ள நிலூக கருணாரத்ன தற்போது 64ஆவது இடத்தை எட்டிப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊக்கமருந்து பாவனை:
# ரஷ்யாவுக்கு முதலிடம் இந்தியாவுக்கு மூன்றாமிடம்



ஊக்க மருந்து அதிகளவில் பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள் இருக்கும் நாடுகளின் பட்டியலில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது.

உலகளவில் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபடும் வீரர்கள் ஊக்க மருந்து உட்கொள்வதாக சர்ச்சைகளில் சிக்குவது தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில், சர்வதேச ஊக்க மருந்து பரிசோதனை மையம்(வாடா) கடந்த 2015இல் எந்த நாட்டு விளையாட்டு வீரர்கள் அதிகளவில் ஊக்கமருந்து உட்கொண்டார்கள் என்ற பட்டியலை வெளியிட்டுள்ளது.இதில், ரஷ்யாவைச் சேர்ந்த 176 விளையாட்டு வீரர்களுடன் அந்நாடு முதலிடம் வகிக்கிறது. இரண்டாம் இடத்தில் 129 வீரர்களுடன் இத்தாலி உள்ளது. மூன்றாம் இடத்தில் இந்தியா 117 வீரர்களுடன் உள்ளது.சிறுநீர் உள்ளிட்ட மாதிரி பரிசோதனைகள் மூலம் இது கண்டறியப்பட்டுள்ளன.

# மேற்கிந்திய தொடர்; மிஸ்பா ஓய்வு

அடுத்த மாதம் மேற்கிந்திய தீவுகளில் ஆரம்பமாகவுள்ள 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருடன் பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷஹாரியர் கான் அறிவித்துள்ளார்.நேற்று லாகூரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். இதன்படி பாகிஸ்தான் டெஸ்ட் அணித்தலைவராக அசார் அலி நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 06TH APRIL 2017